Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்

SPICE TRAVELS & TOURS (PVT) LTD®

IATA



(C/490)

412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2041 மாசி 24 | செவ்வாய்க்கிழமை (08.03.2011) | பக்கங்கள் 12 | ஓசை – 159

## கடத்தப்பட்ட பெண் சடலமாக மீட்பு; சாவகச்சேரியில் நடந்த திகில் சம்பவம்

### சந்தேகத்தின் பேரில் கணவன் கைது



(சாவகச்சேரி)

சாவகச்சேரி மேற்கு பிரதேச த்தில் கணவனால் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட மனைவி நேற்றுக் காலை 8.45 மணியளவில் சாவகச்சேரி கிராம்புவில் முருகன் ஆலயத்தி ற்கு அருகாமையிலுள்ள பற்றைக்குள் இருந்த பாழடைந்த வீட்டிலிருந்து சடலமாக (11ஆம் பக்கம் பார்க்க)

## சிறிதரன் எம்.பி. பயணம் செய்த வாகனத்தின் மீது தாக்குதல்



(கொழும்பு)

அநுராதபுரம், நொச்சியாகம பிரதேசத்தினூடாகப் பயணித்துக் கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பயணித்த வாகனம் மீது இனந்தெரியாதோர் சிலரால் இரு கைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதுடன், துப்பாக்கிப்பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று மாலை இடம்பெற்ற இந்தத் தாக்குதல் சம்பவங்களினால் தனக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை என்று சிறிதரன் எம்.பி. ஊடகங்களுக்குத் (11ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் மனித உரிமைகள் பேணுவதில் பாதுகாப்பு படையினருக்கும் பங்குண்டு

படைகளின் நலன்புரி அதிகாரி பிரிகேடியர் றொட்றிக்கோ தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

**வடக்கில் மனித உரிமைகளைப் பேணி, மக்க ளைப் பாதுகாப்பதில் பாதுகாப்பு படையினருக்கு பெரும் பங்குண்டு. இப்பங்கிலிருந்து நாம் ஒருபோதும் விலகியிருக்கமாட்டோம் என்று யாழ். பாதுகாப்புப் படை தலைமை அலுவலக நலன்புரி அதிகாரி பிரிகேடியர் ஆர்.றொட்றிக்கோ** ( 11ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த அனுபவப் பகிர்வு பாகிஸ்தானுடன் அரசு பேச்சு

### இராணுவத் தூதுக்குழுவுடன் ஆராய்வு

(கொழும்பு)

பாகிஸ்தான் உயர் மட்ட இராணுவத் தூதுக்குழுவொன்று ஆறு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளது.

பாகிஸ்தான் இராணுவப் பயிற்சி மற்றும் மதிப்பீட்டு மா அதிபரான லெப்டினன் ஜெனரல் முஸம்மில் ஹுசைன் தலைமையிலான இத்தூதுக்குழு எதிர் வரும் 11ஆம் திகதி வரை இலங்கையில் தங்கவுள்ளது.

இரு தரப்பு தொழில் சார் அனுபங்களைப் பகிர்ந்து கொள்ளும் அடிப்படையில் இலங்கை வந்துள்ள இக்குழுவில், பாகிஸ்தான் இராணுவ சிரேஷ்ட அதிகாரிகள் பலர் உள்ளடக்கப் (11ஆம் பக்கம் பார்க்க)

## அகதி அந்தஸ்துகோரி சரணடைபவர்கள் இத்தாலியில் அதிகரித்து காணப்படுகின்றனர்



(இத்தாலி)

ஆயிரக்கணக்கான இலங்கையர் உட்பட வெளிநாட்டுப் புகலிடக் கோரிக்கையாளர்கள் இத்தாலியில் சரணடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சுமார் ஆயிரம் புகலிடக் கோரிக்கையாளர்கள் நேற்றைய தினம் இத்தாலியின் லாம்டுசா தீவில் சரணடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

டியூனிசீயா மற்றும் லிபியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களே அதிகளவில் இத்தாலியில் சரணாகதி அடைவதாகக் குறிப்பிடப்படுகிறது.

படகுகளின் மூலம் இவர்கள் இத்தாலித் தீவுகளை அடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதிகளவான புகலிடக் கோரிக்கையாளர்கள் படையெடுப்பதனால் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக இத்தாலி, ஐரோப்பிய ஒன்றியத்திடம் அறிவித்துள்ளது.

லாம்டுசா தீவில் 850 பேர் தங்குவதற்கான வசதிகளே காணப்படுவதாகவும், பெருமளவிலான புகலிடக் கோரிக்கையாளர்கள் புகலிடம் கோரியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. ஏற்கனவே குறித்த தீவில் 6000 டியூனிசியர்கள் புகலிடம் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லிபியாவின் நிலைமைகள் மோசமடைந்து வருவதாகவும் பெரும் எண்ணிக்கையிலான புகலிடக் கோரிக்கையாளர்கள் ஐரோப்பிய நாடுகளை நோக்கி படையெடுக்கக் கூடும் எனவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

## செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு வவுனியாவிலிருந்தும் வெளியேறுகிறது

(வவுனியா)

பதின்மூன்று வருடங்களுக்கு மேலாக வவுனியாவில் தனது பணிகளைச் செய்து வந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு, இம்மாத இறுதியுடன் தனது பணிகளை இடைநிறுத்தி வெளியேறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழு வவுனியாவை விட்டு வெளியேறுகின்ற போதிலும், உள்ளூர் பணியாளர்கள் நான்கு பேர் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா மாவட்டக் கிளையினூடாக சில பணிகளைத் தொடர்ந்தும் செய்வார்கள் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

மேலும் செஞ்சிலுவைச் சங்கக் குழு பயன்படுத்திய கணினி உட்பட இலத்திரனியல் உபகரணங்களை வவுனியா செஞ்சிலுவைச் சங்கக் கிளைக்கு அன்பளிப்புச் செய்வதாகவும் அறிவித்துள்ளது.

செஞ்சிலுவைச் சங்கக்குழு வவுனியாவை விட்டுச் செல்வது தங்களுக்குப் பெரும் இழப்பாக உள்ளது என வவுனியா வாசிகள் பலர் தெரிவித்தனர். (மி,39)

## இலங்கையுடன் ஒத்துழைக்க பிரேசில் அரசு அதிக ஆர்வம்



(கொழும்பு)

உலகளாவிய பிரச்சினை களான பாதுகாப்பு, அணுவா யுத ஒழிப்பு, கால நிலை மாற்றம், மிலேனியம் அபிவிருத்தி இலக்குகள் ஆகிய விடயங்களில் இலங்கையுடன் ஒத்து ழைப்பதற்கு பிரேஸில் ஆர்வமாகவுள்ளதாக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரேஸில் வெளிவிவகார அமைச்சர் அன் டோனியோடி அகுயர் பட்ரியோட்டா நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளுக்கு மேலாக உலகளாவிய பிரச்சினைகளிலும் இலங்கையுடன் ஒத்துழைக்க நாம் விரும்புகின்றோம் என அவர் குறிப்பிட்டார்.

இலங்கை வணிக சமூகத்துடனும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடனும் ஆக்கபூர்வ மான பேச்சுக்கள் நடத்தப்பட்டதாகவும் அவர் கூறினார். (11ஆம் பக்கம் பார்க்க)

# சாதனை படைக்கும் மாணவர் சமூகம் வேண்டும் அதனை உருவாக்குவதே அரசின் தற்போதைய இலக்கு

## நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் பேச்சு



(யாழ்ப்பாணம்)

ஆரம்பப் பிரிவு கல்வியினை தரமானதாக அபிவிருத்தி செய்து சிறு பராயத்திலேயே மாணவர்களை சிறந்த திறமைமிக்க மாணவர்களாக வளர்க்க வேணடும் என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் அவர்கள் தெரிவித்தார்.

நேற்று இளவாலை றோ.க.த. ஆண்கள் பாடசாலையில் இடம் பெற்ற வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், ஆரம்ப பிரிவு மாணவர்களின் கல்வியில் தான் நாம் அதிக அக்கறையோடு செயற்படவேண்டும். இந்தப் பருவத்தில் மாணவர்களை திறமையானவர்களாக மாற்றி விட்டால் எதிர்காலத்தில் அவர்கள் திறமைமிக்க சாதனை படைக்கும் மாணவர்களாக திகழ்வார்கள். எனவேதான் இந்த ஆரம்பப் பிரிவு கல்வி வளர்ச்சியில் தற்போதைய அரசும் அதிகம் கவனம் எடுத்து பல்வேறு திட்டங்களை வகுத்து செயற்பட இருக்கிறது. மேலைத்தேய நாடுகளைப் போன்று கணினி அறிவு மற்றும் நவீன தொழில் நுட்ப அறிவு கொண்ட சமூகமாக எமது மாணவர்களையும் ஆரம்பத்திலிருந்தே வளர்க்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

மேலும் நாட்டின் ஏனைய பிரதேசங்களோடு ஒப்பிடுகையில், எமதுபிரதேசங்களில் ஆரமபப் பிரிவுக் கல்வி வளர்ச்சி பின்தங்கிய நிலையில் இருக்கின்றமையால் நாம் 'அந்த நிலைமையை விரைவில் மாற்றியமைக்க உள்ளோம். கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும் பல செயற் திட்டங்களை இதற்காக முன்னெடுக்கவுள்ளார். எனவே அதன் பயன் இப்பாடசாலைகளுக்கும் கிடைக்கும் எனவும் குறிப்பிட்டார்.

அத்தோடு இப்பாடசாலைக்கு இரண்டு கணினிகளை வழங்குவதாகவும், பாண்ட் இசை அணியினை உருவாக்குவதற்கு நிதியினை ஒதுக்கித் தருவதாகவும் உறுதியளித்தார்.

பாடசாலை அதிபர் செல்வி அ.சா.மரியாம்பிள்ளை தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், வலிகாமம் கல்வி வலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் கணேசலிங்கம், இளவாலை பங்குத் தந்தை கிறிஸ்ரெபர் அடிகளார், கொய்யாத்தோட்ட பங்குத் தந்தை தேவசகாயம் அடிகளார், ஈ.பி.டி.பி மானிப்பாய் பிரதேச அமைப்பாளர் ஜீவா, ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் பிரதேச இணைப்பாளர்ஜீவன் மற்றும் பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தர வாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங் கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (R/017)

**விற்பனைக்கு**

கட்டுமண் 1கியூப் - 11,000, அத்திவாரக்கருங்கல் 6X9, 1கியூப்- 9000, ஒரு அரிகல் 40 ரூபா, 3/4'' கருங்கல்லு சல்லி ஒரு கியூப் -13000. அதிகம் தேவைப்படுவோருக்கு விலைக் கழிவு உண்டு. யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களுக் கும் கொடுக்கப்படும். **தொடர்புகளுக்கு:** 0776253719 (R/059)


# வடிசாராயக்களஞ்சியம் மீசாலையில் முற்றுகை

## 375 லீற்றர் வடிசாராயம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

சட்டத்திற்குப் புறம்பான முறையில் 375லீட்டர் வடிசாரயத்தினை வைத்திருந்த மீசாலை வடக்கைச் சேர்ந்த ஒருவரை கொடிகாமம் பொலிஸார் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தினர். சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா முன்னிலையில் ஆஜர்படுததப்பட்ட நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதால், அவருக்கு 30 ஆயிரம ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத்தைச் செலுத்தத்தவறின 5 மாத சாதரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என நீதிபதி உத்தரவிட்டார். (மி,11)

**- யாழ். கிளி. மாவட்டங்களில் -**

# பிறப்பு, இறப்புப் பதிவுகளை பெறுவதில் சிக்கல் நிலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் உள்ள மாவட்ட பிறப்பு, இறப்பு காரியாலயங்களில் பிறப்புச் சான்றிதழ்களுக்கு விண்ணப்பிப்போருக்கு அவர்களது பதிவுகள் இல்லை எனப் பதில் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டு வருவதாகப் பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேநேரத்தில் பிறப்புச் சான்றிதழுக்கு விண்ணப்பித்த சிலர் ஏற்கனவே பெற்றுக் கொண்ட பிறப்புச் சான்றிதழ்களை இங்குள்ள பதிவாளர் காரியாலயத்திற்கு சமர்ப்பித்தபோது அங்கு உள்ள பதிவுச் சான்றிதழ் புத்தகங்களில் அவர்களது பதிவுகள் இல்லை எனவும், அதே நேரத்தில் பதிவுப் புத்தகங்கள் அழிந்து போய்விட்டன எனவும் அதிகாரிகள் தெரிவிப்பதாக மக்கள் கூறுகின்றனர்.

இவ்வாறான நிலைமையின் காரணமாக மக்கள், தாம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதாக தெரிவித்துள்ளதோடு, குறிப்பாக பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு சேர்ப்பதிலும், அடையாள அட்டைகள் மற்றும் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்பது தொடர்பிலும் பெரும் சிரமநிலை காணப்படுவதாகவும் குறிப்பிடுகின்றனர்.


GEMINI COLLEGE
NOVELTY IN HIGHER EDUCATION

STUDY & WORK IN UK

எமது கல்லூரிகளின் பிரதிநிதிகளின் மூலம் Spot C.A.S LETTER With in 3 Hours

- உடனடியாக Cas Letter வழங்கப்படும்.
- O/L தகைமை மட்டும் போதுமானது.
- கல்லூரிக் கட்டணம் 1500 இலிருந்து.
- 7 நாட்களுக்குள் V.F.S இல் கையளிக்கும் ஏற்பாடுகள்.
- குடும்பமாகக் கல்வி கற்க விரும்புபவர்களுக்கு விசேட ஏற்பாடுகள்.
- விசாவிற்கு 100% உத்தரவாதம்.
- அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் மூலம் ஆவணங்கள் தயார்படுத்தித் தரப்படும்.



திகதி: 7 ஆம். 8 ஆம் திகதிகளில்
மாலை 3.00 மணியிலிருந்து

இடம்: 245, பலாலி வீதி.
கந்தர்மடம். யாழ்ப்பாணம்.

குறிப்பு: மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளே வழங்கப்படவுள்ளதால் முற்பதிவு செய்து கொள்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

For Appointment :0770871616

(C/497)

உண்மையே கடவுள். எல்லா அறங்களும் உண்மையையே பின்தொடர்கின்றன. உண்மையை விட மேலானது வேறொன்றுமில்லை.

- வால்மீகி -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## பனைவளப் பயன்பாடு

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் குறிப்பாக வடக்கு - கிழக்கு பிரதேசங்களின் பொருளாதார வளர்ச்சியில் பனை தென்னை வளம் சார்ந்த உற்பத்திகள் முக்கிய பங்கினை வகித்து வருகின்றன.

பனைவளம் தமிழ்மக்களுக்கு இயற்கை அன்னை அளித்த தேசியச் சொத்து. இதனைக் கட்டிக் காக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு தமிழ்மக்களுக்கும் உண்டு.

இலங்கையில் காணப்படும் ஒரு கோடியே 15 இலட்சம் பனைமரங்களில் சுமார் 70 இலட்சம் பனைமரங்கள் யாழ்ப்பாணத்தில் காணப்படுவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

உள்நாட்டில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களின்போது தமிழ்மக்களது உடமைகளும், உயிர்களும் அழிக்கப்பட்டதுபோல் பனைமரங்களும் அழித்தொழிக்கப்பட்டதை எவரும் எளிதில் மறந்துவிடமுடியாது.

வடமாகாணத்தில் மட்டும் 25 இலட்சம் பனைமரங்கள் அழிக்கப்பட்டன. இந்த அழிவுக்கான காரணங்களைக் கண்டறிய முற்படாத நிலையில், மீளவும் பனைவளத்தைப் பெருக்குவதில் துறைசார் வல்லுநர்கள் கவனம் செலுத்தியுள்ளனர்.

கூட்டுறவு அமைப்பாக ஒன்றிணைந்த பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும், பனை அபிவிருத்திச் சபையும் இந்த அருமையான கைங்கரியத்தில் ஈடுபட்டுவந்தன.

அழிந்த பனைமரங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் பனை விதைகள் பெருமளவு நாட்டுவதில் மேற்கூறப்பட்ட இரு நிறுவனங்களும் ஈடுபட்டுள்ளன.

'கற்பகதரு' என அழைக்கப்படும் பனைமரத்திலிருந்து அதன் வேர் தொடக்கம் நுனி வரை மக்கள் பயன்பாட்டுக்குரிய பொருட்கள் உற்பத்தி செய்ய முடியும் என துறைசார் நிபுணர்கள் தெரிவித்து வருகின்றனர்.

பனைவெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு, பனம்பழச்சாறு என்பவற்றைத் தயாரிப்பதற்கு நவீன தொழில்நுட்ப முறைகளைக் கையாள்வதற்கான ஆராய்ச்சிகளோ, திட்டமிடல்களோ எதுவும் எவராலும் இதுவரை மேற்கொள்ளப்படாமல் இருப்பது கவலைதரும் செயலாக உள்ளது.

உள்ளூரில் கிடைக்கக்கூடிய மூலப்பொருள் வளங்களில் பனைமரத்திலிருந்து கிடைக்கும் அத்தனை மூலப்பொருட்களிலிருந்தும் விதம்விதமான கைவினைப்பொருட்களை உற்பத்தி செய்து உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்பு பெருமளவில் இருந்தபோதும், ஒருங்கிணைத்து செய்யக்கூடிய நிறுவனம் ஒன்று அவசியம் தேவையாகிறது.

இப்போதுள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும், பனை அபிவிருத்திச் சபையும் இணைந்து செயற்படுவதன் மூலம் இக்குறையை ஓரளவு நிவர்த்திசெய்யமுடியும்.

இவ்விடயத்தில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அமைச்சர், பனைவளம் சார்ந்த நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலை மேற்கொண்டிருந்ததனை பனை வள அபிவிருத்தியின் எதிர்காலம் நல்ல முறையில் அமையும் என துறைசார் நிபுணர்களினால் எதிர்பார்க்கப்படுகிறது.

பனந்தொழில் வல்லுநர்களை குறிப்பாக இளைஞர்களை இனங்கண்டு இத்தொழிலில் ஈடுபடுத்தி பனம்பொருள் உற்பத்திகளில் அவர்களை வல்லுநர்களாக உருவாக்கவேண்டியதும் ஒவ்வொருவருக்கும் உண்டு என்பதை உணர்ந்து அனைவரும் செயற்பட முன்வரவேண்டும்.

-ஆசிரியர்-

# புத்தகாலத்தில் மழுங்கடிக்கப்பட்ட கல்வி மீண்டும் புத்துயிர் பெற்று வருகிறது

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாண மக்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மிகச்சிறந்த பொறியியலாளர்களாக விளங்குகின்றனர். யாழ்.மாவட்டத்திலே கணிதத்துறையில் நிபுணத்துவம் பெற்ற பலர் இருந்திருக்கின்றார்கள். போராட்டகாலங்களில் மழுங்கடிக்கப்பட்ட கல்வி யாழ்ப்பாணத்தில் மீண்டும் மறுமலர்ச்சி பெறவேணடும்என எ.பி.எஸ்.எஸ். நிறுவனப்பணிபாளர் பேராசிரியர் கே.சந்திரபோஸ தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டுப் பாடசாலைகளைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு நடைபெற்ற கருத்தரங்கு மற்றும் பயிற்சிச் செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொக்குவில் தொழில்நுட்பவியல் கல்லூரி முதல்வர் ந.யோகராஜன் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் பேராசிரியர் தொடர்ந்து பேசுகையில்:

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்கள் பட்டயப்பொறியியலாளர்களாக வருவதற்கு எமது நிறுவனம் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கிறது. மிகக் குறைந்த செலவில் இப்பட்டத் தினையும் இங்கிருந்தே பெற்றுக் கொள்ள முடியும் 2004 இல் பாதை திறந்திருந்தபோது யாழ்ப்பாணத்தில் கற்கைநெறிகளைத் தொடங்கிய நாம் பாதை பூட்டப்பட்டதில் இடைநிறுத்தி மீண்டும் இந்த வருடத்தில் கற்கைநெறிகளை ஆரம்பிக்கவுள்ளோம்.

யாழ்.மாவட்ட பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 1000 உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு "பொறியியல் தொழில்நுட்பம்" பற்றிய கருத்தரங்கும் வழிகாட்டல் பயிற்சி நெறியும் வழங்கி சான்றிதழ்களை வழங்கவுள்ளோம். இதில் கிரமமாகப் பங்குபற்றிய மாணவர்களுக்கு 2000 ரூபா பெறுமதியான வவுச்சர்களையும் அன்பளிப்பாக வழங்கவுள்ளோம். (10)

## தேசிய கலைப் பெருமை - 2011 காட்சிப்படுத்தல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மத்திய மற்றும் மாகாண சுகாதார அமைச்சின் கீழ் உள்ள சகல திணைக்கள ஊழியர்களுக்கும் இடையே தேசியக்கலைப் பெருமை - 2011 என்னும் சுகாதார சம்பந்தமான காட்சிப்படுத்தல் நிகழ்வு ஒன்று எதிர்வரும் 12 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் ஹரிச்சந்திர சிறிவிதாரண தெரிவித்துள்ளர்.

அன்றையதினம் காலை 9.00 மணிக்கு கொழும்பு தேசியவைத்தியசாலைக்கு பின்புறமாக அமைந்துள்ள பிரஸ்.பற்றீசியார் கல்லூரியில் இக்காட்சிப்படுத்தல் நடைபெறவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

சுகாதார அமைப்பின் கீழ் உள்ள திணைக்களங்களுக்கு அவர் இது தொடர்பான சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இந்நிகழ்வில் சிறுகதைகள், காட்டூன்கள், சுவரொட்டிகள், குறுந்திரைப்படங்கள் முதலானவை காட்சிப்படுத்தப்படவுள்ளன.

மேலும் இக் காட்சிப்படுத்தலில் இருந்து தெரிவு செய்யப்படும் ஆக்கங்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளது எனவும் தெரியவருகின்றது.

அத்துடன் இது தொடர்பான மேலதிக விபரங்களை அந்தந்தப்பகுதி சுகாதார அமைச்சின் கீழ் உள்ள திணைககளங்களில் பார்வைக்கு வைககப் படடுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது (பா)

## திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் நிகழ்வு நாளை

(கொழும்புத்துறை)

யாழ்.திருமறைக்கலாமன்றத்தால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பைச் சித்தரிக்கும் மாபெரும் தயாரிப்பாகிய திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளான நாளை மாலை 04.30 மணிக்கு மன்றத்தின் கலைத்தூது மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.அஞ்சனந்தாழ்வு பங்குத்தந்தையான ஜே.நீக்கிலஸ் அடிகள் கலந்துகொண்டு இவ்வாற்றுகையில் பங்கேற்கவுள்ள நடிகர்களுக்கான பிரதிகளை வழங்கிச் சிறப்பிப்பதுடன் ஆசியுரையும் வழங்குவார். பிரதி வழங்கும் நிகழ்வில் வழமையாக திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற்று நடிக்கின்ற அனைத்துக் கலைஞர்களையும், இம்முறை புதிதாக இணைந்து நடிப்பதற்கு விருப்பமுடையவர்களையும் கலந்து கொள்ளுமாறு திருமறைக்கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

இம்முறை திருப்பாடுகளின் நாடகம் எதிர்வரும் ஏப்பிரல் மாதம் 13 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை தினமும் மாலை 6.45 மணிக்கு'கடவுள் வடித்த கண்ணீர்' என்னும் பெயரில் மன்ற அரங்கில் மேடை யேற்றப்படவுள்ளது. (52)

## சாரதியின் அவசரம்; பெண் தவறி விழுந்தார்

(ஆனைக்கோட்டை)

யாழ்ப்பாணத்திலிருந்து நவாலியூடாகச் செல்லும் 756 இலக்க பேருநதில் பிரயாணம் செய்த பெண் ஒருவா பேருந்தை விட்டு இறங்கிய சமயம் சடுதியாக சாரதி பேருந்தை எடுத்ததனால் அப்பெண் கீழே விழுந்து காயமின்றித் தப்பியுள்ளார்.

நேற்றுக் காலை 11 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் குறித்த பெண் ஆணைக்கோட்டை மூத்தவிநாகயர் ஆலயத்தடிக்கு செலவதற்காக பேருந்தில் மணியை அடித்து நிறுத்தி அவர் இறங்கிய பொழுது சடுதியாக சாரதி பேருந்தை எடுத்ததனால் குறித்த பெண் கீழே வழுந்தபோதும் பலத்த காயங்கள் எதுவுமின்றித் தப்பியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது அவ்விடத்தில் பாதுகாப்புக் கடமையில் இருந்த படையினரும் அவ்வீதியால் சென்றுகொண்டிருந்த பொதுமக்களும் குறித்த பேருந்தின் சாரதியை எச்சரித்ததுடன் இவ்வாறான கவனக் குறைவான செயற்பாட்டினால் விபத்துக்கள் இடம் பெறுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்தனா. (104)

## வினைத்திறன் தடைப்பரீட்சை

(கொழும்பு)

இலங்கை அதிபர் சேவையில் உள்ளவர்களுக்கான வினைத்திறன் காண் தடைப்பரீட்சை எதிர்வரும் 12,13 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள அதிபர்கள் பரீட்சைக்குச் செல்வதற்கான அனுமதியினை தத்தம் கல்வி வலயங்களில் பெற்றுக் கொள்ளலாம் என வடமாகாண கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. (மி,109)

## நாடளாவிய ரீதியில் 1894 பேர் டெங்கு நோயால் பாதிப்பு

(கொழும்பு)

கடந்த ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் நாடளாவிய ரீதியில் 1894 பேர் டெங்கு நோய்த் தாக்கத்திற்கு ஆளானதுடன், 18 பேர் உயிரிழந்துள்ளதாகச் சுகாதார அமைச்சின் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி கடந்த ஜனவரி மாதத்தில் 904 பேரும், பெப்ரவரி மாதத்தில 990 பேரும் டெங்கு நோய்த் தாக்கத்திற்கு ஆளாகியுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிகம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்த மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதங்களில் ஏழுபேர் உயிரிழந்ததுடன், 686 பேர் நோய்த்தொற்றால் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதேபோன்று 237 பேர் கம்பஹா மாவட்டத்திலும், 136 பேர் புத்தளம் மாவட்டத்திலும் நோய் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 88 பேரு இந்த நோய்த்தாக்கத்தால் பாதிக்கபட்டுள்ளதாகவும், தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

## யாழ்.குடாவில் 83 களின் பின் மீன்பிடியில் பாரிய வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

1983 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து யாழ்.குடாநாட்டில் பிடிக்கப்படும் மீனின் அளவில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் புள்ளி விபரமொன்று தெரிவித்தது.

தற்சமயம் யாழ்.குடாநாட்டில் மாதாந்தம் 1800 மெற்றிக்தொன் அளவான மீன் பிடிக்கப்படுவதாகத் தெரிவித்த அப்புள்ளிவிபரங்கள், 1983 ஆம் ஆண்டு இத்தொகை மாதமொன்றிற்கு 48,677 மெற்றிக் தொன்களாக இருந்தது எனவும் அது படிப்படியாக நாட்டின் யுத்த சூழல்கள் காரணமாகக் குறைவடைந்து சென்று தற்போதைய 1800 மெற்றிக் தொன் என்ற அளவை அடைந்துள்ளதாக அப் புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் யாழ்.குடாநாட்டில் மீன்பிடித்துறையில் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்கள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் கடந்த கால நிலையை அடைய நீண்ட காலம் பிடிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு யாழ்.குடாநாட்டில் மீன்பிடி சம்பந்தமாக இருக்கின்ற பெரும்பாலான பிரச்சினைகளுக்கு உடன் தீர்வு காணப்பட வேண்டும். இல்லையேல் எமது பொருளாதாரம் வீழ்ச்சியுறும் நிலையை எதிர்கொள்ள நேரிடும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (பா)

# நகுலேஸ்வரம் ஆலயப் புனரமைப்புக்கு சைவ அபிமானிகள் உதவ வேண்டும்!

(யாழ்.நிருபர்)

வரலாற்றுத் தொன்மைமிக்க கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தைப் புனரமைக்க நாவலர் பெருமானே முயற்சி செய்திருக்கிறார். கடந்தகால அனர்த்தங்களினால் சிதிலமடைந்திருக்கும் நகுலேஸ்வரத்தைப் புனரமைப்பதற்கு சைவ அபிமானிகள பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் லலீசன் தெரிவித்தார்.

சிவனவன் கழற்கோர் செந்தமிழ்மாலை நூல் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு வெளியீட்டுரை நிகழ்த்தியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசபந்து க.கு.க.சிவபாலன் தலைமையில் கடந்த சிவராத்திரியன்று கீரிமலை நகுலேஸ்வரர் தேவஸ்தானத்தில் நடைபெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

நகுலேச்சரத்தின் தொன்மைமிக்க வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு 'சிவனவன் கழற்கோர் செந்தமிழ் மாலை' என்ற அரிய பாமாலை நூலை தேசபந்து இராசையா குகதாசன் ஆக்கித்தந்திருக்கிறார்.

அர்ச்சனை பாட்டேயாகும் என்ற பெருமானின் திருவாக்கிற்கமைய நகுலேஸ்வரப் பெருமானின் திருவடித் தாமரையில் சூட்டப்பெற்ற 'சிவனவன் கழற்கோர் செந்தமிழ் மாலை' நூல் வெளியீட்டின் மூலம் பெறப்படும் நிதியானது நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர சுவாமியின திருத்தலப் புனரமைப்பு வேலைகளுக்காகப் பயன்படுத்தப்படவுள்ளமை போற்றத்தக்கதாகும்.

ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்வதற்கு உதவுவதைப்போல் சிவபுண்ணியம் வேறில்லை என் நாவலர் பெருமான் உறுதிபட உரைக்கின்றார். சிவனடியார்கள் இந்நூலை இயன்றளவு நிதிகொடுத்து வாங்கி எம்பெருமான் திருப்பணிக்கு உதவுவதோடு நூலைப் பாராயணம் பண்ணி நகுலேஸ்வரப் பெருமான் திருவருட்கடாட்சத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

நூல் நயப்புரையை நிகழ்த்திய தேசபந்து செஞ்சொற் செல்வர் இரா.செல்வவடிவேல் தனதுரையில்-

நூலாசிரியர் இராசையா குகதாசன் சிறந்த கவிஞர் ஆறுமுக நாவலரின் வரலாற்றைக் கவிதை வடிவில் இந்து சாசனத்தில் எழுதி வருகிறார்.

எதுகை, மோனையுடன் சந்தம் சேர்த்துப் பாடுவது மிகக் கடினமான பணியாகும். இதனைச் சிறப்பாகச் செய்யக் கூடிய ஒருசிலரில் கவிஞர். குகதாசனும் ஒருவராவார் என்றார்.

கீரிமலைச் சிவன் தேவஸ்தான ஆதீன கர்த்தரும் பிரதம சிவாச்சாரியாருமான ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் ஆசியுரை வழங்கினார்.

தொழிலதிபர் சிவத்திரு சு.இராசகுமாரன் நூலை வெளியிட்டு வைக்க தேசபந்து கே.ஆனந்தராஜன் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார். இராசையா குகதாசன் ஏற்புரை நிகழ்த்தினார். (10)

## முதலுதவிப் பயிற்சி

கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்களுக்கான "பால் நிலை சமத்துவம்", "அனர்த்த முகாமைத்துவ முன் ஆயத்தங்களுக்கான முதலுதவிப் பயிற்சி" என்னும் தலைப்புக்களிலான பயிற்சிகள் 3 தினஙகள் நடைபெற்று வருகின்றன.

சாந்தியகத்தில் உளவளத் துணையாளராகப் பணியாற்றும் டாக்டர் பிறிற்ரோவும், கியுடெக்-கரித்தாஸ் நிறுவனத்தைச் சேர்ந்த ஜோசப்பாலாவும், ஸ்கந்தவரோதயக் கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர் அன்ரனும இப் பயிற்சிப் பாசறையினை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (21)

## மகளிர் தினப் பேரணி

சர்வதேச மகளிர்தினத்தை முனனிட்டு கியூடெக்-கரித்தாஸ் நிறுவனம் இன்று மகளிர் தினப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளது.

கியூடெக் நிறுவன வளாகத்தில் இருந்து காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் பேரணியினர் அச்சுக்கூடவீதி, மற்றும் பிரதானவீதி, 6ஆம் குறுக்கு வீதி, கடற்கரை வீதியூடாக விழா மண்டபத்தைச் சென்றடைந்த பின்னர் நிகழ்வுகள் ஆரம்பமாகும். (68)

## சங்காபிஷேகம்

(சண்டிலிப்பாய்)

மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் 5ஆம் நாள் உறசவமும் அஸ்டோத்தர சத சங்காபிஷேகமும் நாளை புதன் கிழமை காலை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் காலை 9.30 மணிக்கு சங்காபிஷேகமும் இடம்பெற்று 11.30 மணிக்கு வசந்த மண்டப் பூசை நடைபெறவுள்ளதுடன் தொடர்ந்து சுவாமி வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது. (54)


## பரிசளிப்பு விழா

(வடமராட்சி)

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 12ஆம் திகதி காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் பே.சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளருமான வ.செல்வராசா மற்றும் அவரது பாரியார் ஆகியோர் பிரதம விருந்தினராகவும், பழைய மாணவரும் பூநகரிப் பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் வ.சொக்கநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். நிறுவுநர் நினைவுப் பேருரையை பழைய மாணவரும் யாழ்.மாவட்ட சமுர்த்தி அதிகார சபையின் இணைப்பாளருமான ஆ.ரகுநாதன் நிகழ்த்தவுள்ளார். (100)

## 20 வருடங்களின் பின் சிறப்புற நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி



(யாழ்ப்பாணம்)

கடந்த இருபது வருடங்களுக்குப் பின்னர் தனது சொந்தக் கட்டடத்தில் இயங்கி வரும் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் கடந்த சனிக்கிழமை தனது வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியைச் சிறப்பாக நடத்தி முடித்தது.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு யாழ்ப்பாணப் பாதுகாப்புப் படைகளின் தலைமையகத்தைச் சேர்ந்த பிரிகேடியர் றொட்றிக்கோ பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

கீர்த்தி, சாந்தி, சக்தி மற்றும் ஜோதி என நான்கு இல்லங்களாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது. இதில் 380 புள்ளிகளைப பெற்று சாந்தி இல்லம் முதலாம் இடத்தையும், சக்தி மற்றும் கீர்த்தி ஆகிய இல்லங்கள் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பெற்றன.

முதலாவதாக வெற்றி பெற்ற இல்லத்திற்கான வெற்றிக்கேடயத்தை 615 ஆவது படைப்பிரிவின் பொறுப்பதிகாரி பிரிகேடியர் புவனேக ரந்தெனிய வழங்கிக் கௌரவித்தார்.

இந்நிகழ்வில் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் உட்பட பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

## நிரந்தரக் கட்டடம்

(வடமராட்சி)

இலங்கை வங்கியின் நெல்லியடிக் கிளைக்கு இம்மாத இறுதியில் நிரந்தரக் கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக வங்கி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது தற்காலிகமான கட்டடமொன்றிலேயே இவ் வங்கி இயங்கி வரும் நிலையில் புதிதாக ஒரு நிரந்தரக் கட்டடத்தை அமைப்பதற்கான ஏற்பாடுகளை வங்கித் தலைமையகம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (100)

## கண்ணிவெடிகள் அகற்றியபின் விரைவில் மீள் குடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் மீள்குடியேற்றம் செய்யப்படாத பல பகுதிகளில் கண்ணிவெடிகள், மிதிவெடிகள் அகற்றியபின் விரைவில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிகளில் கண்ணிவெடிகளும், மிதிவெடிகளும் பெருமளவில் காணப்படுவதால் இவைகள் அகற்றப்பட்ட பின் கண்ணிவெடிகளை மீட்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தினரின் சான்றிதழ் பெறப்பட்ட பின் மக்கள் படிப்படியாக மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர்.

இம்மீள்குடியேற்றம் தொடர்பாக யாழ்.அரச அதிபரும், சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களும் தீர்மானித்து முடிவு எடுப்பார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## பாராட்டும் சான்றிதழும் பெற்றார்



(யாழ்ப்பாணம்)

சென்னை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிலையம் வழங்கிய நிதியுதவியுடன் புதுவை பல்கலைக்கழக சுப் பிரமணிய பாரதியார் தமிழியற் புலமும், சென்னை வானவில் பண்பாட்டு மையமும் இணைந்து வான் புகழ் என்னும் தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கு ஒன்றைக் கடந்த பெப்ரவரி மாதம் 3 தினங்கள் நடத்தியுள்ளது.

இக்கருத்தரங்கில் ஓய்வுபெற்ற நல்லூர்க் கோட்டக் கல்விப்பணிப்பாளர் கே.வி.குணசேகரம் சமர்ப்பித்திருந்த "ஒவ்வொரு குறளுக்கும் ஓராயிரம் கதைகள் வேண்டும்" என்னும் தலைப்பிலான ஆய்வுக் கட்டுரை பாராட்டுப் பெற்றுள்ளதுடன் அதற்கான சான்றிதழும் அவருக்கு வழங்கப்பட்டது.

## வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை சுகாதாரப் பகுதியினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பருத்தித்துறை சுகாதாரத் திணைக்கள விசேட சுகாதாரப் பரிசோதகர் எஸ்.சிவபாலன் தெரிவித்தார்.

இதன் ஒரு கட்டமாக மருதங்கேணிப் பகுதியில் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகிறது. தொடர்ந்து பருத்தித்துறை, வல்வெட்டித்துறைப் பகுதிகளில் நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

மேற்படி பகுதிகளில் சுகாதாரப் பகுதியினர் ஒலிபெருக்கி மூலம் தடுப்பூசி ஏற்றப்படும் இடங்கள் குறித்து அறிவித்து வருகின்றனர். எனவே குறித்த பகுதிகளில் நாய்களை வளர்ப்போர் தவறாது தடுப்பூசியை ஏற்றுமாறு அவர் பொது மக்களைக் கேடடுக்கொண்டுள்ளார். (100)



இயற்கை எய்திய மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆதீன கர்த்தா சண்முகநாதக் குருக்களின் இறுதி அஞ்சலி நிகழ்வில் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க மலர் வணக்கம் செய்வதையும், அந்தணப் பெருமக்கள் தமது இறுதி அஞ்சலி செலுத்துவதையும் காணலாம்.

# தமிழக மீனவரின் அத்துமீறலைத் தடுக்க பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன

(வடமராட்சி)

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடிப்பதை, தடைசெய்தல் சம்பந்தமாக வவுனியா அருந்ததி விருந்தினர் விடுதியில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அவையாவன:- இலங்கை ஆழ்புல எல்லைப் பரப்பினுள் தமிழக மீன வர்கள் அத்துமீறி மீன்பிடிப்பதைத் தடைசெய்தல்.

அண்மைக்காலத்தில் தமிழக மீனவர்களின் இழுவைப்படகுகளினால் சேதமாக்கப்பட்ட வலை உபகரணங்களைப் பதிவு செய்தலும், மதிப்பீடு தயாரித்தலும்,

இவ்விடயத்தில் தென்னிலங்கை மீனவர் அமைப்புப் பிரதிநிதிகள், புத்திஜீவிகளையும் கலந்துரையாடலில் கலந்துகொள்ள ஒழுங்குகள் செய்தல்.

இவ்விடயம் சம்பந்தமாக உரிய ஆலோசனைகளைப் பெறுவதற்கு சட்டவல்லுநர் உதவியைப் பெறுதல்.

இக்குழுவினர் மீண்டும் ஒரு முறை கொழும்பில் சந்தித்து இம்மாதம் 14 ஆம் திகதியன்று கலந்துரையாடுவதுடன், மறுநாள் 15 ஆம் திகதி தென்னிலங்கை மீனவப் பிரதிநிதிகள், புத்திஜீவிகளைச் சந்தித்துக் கலந்துரையாடல் நடாத்துவது, முடிவில் இத்தீர்மானத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவியாக கடற்தொழில் அமைச்சர், திணைக்களச் செயலாளர், உயர் அதிகாரிகளைச் சந்திப்பதற்கான குழுவினரைத் தெரிவு செய்தல் என்பவையாகும்.

யாழ்ப்பாண மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் சி.தவரத்தினம், பூநகரி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் யோ.பிரான்சீஸ், மன்னார் புனித லோறன்சியார் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் அன்ரன் யோகரட்ணம் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து 33 பிரதிநிதிகளுடான யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற்துறை விரிவுரையாளர் சூசை ஆனந்தன் ஆகியோர் பங்குபற்றினர்.

இக்கலந்துரையாடலுக்கான ஒழுங்கமைப்புக்களைத் தேசிய மீனவர் ஒத்துழைப்பு அமைப்பு அமைப்பாளர் ஹேமன்குமார, இணைப்பாளர் அன்ரனி யேசுதாசன் ஆகியோர் இணைந்து ஒழுங்கமைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (70)

# இணைந்த செயற்பாடு ஆலய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும்

(யாழ்.நிருபர்)

ஆலயத்தைச் சிறந்த முறையில் ஆதீனகர்த்தாக்கள் நடாத்துவதற்கும் மற்றும்திருப்பணி வேலைகளுக்கும் அனைவரும் ஒற்றுமையாக பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெற்ற அடியார்கள் சபையின் பொதுக் கூட்டத்திற்கு தலைமைவகித்து உரையாற்றிய அடியார்கள் சபைத்தலைவர் இ.ஜெயராசா குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரைநிகழ்த்துகையில் -

இதுவரை காலமும் கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கிவந்த அடியார்கள் சபை இன்று ஆலயத்தில் பொதுக் கூட்டத்தை நடத்துவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

அடியார்கள் சபையுடன் திருப்பணிச் சபையும் இணைந்து எதிர்காலத்தில் நல்லதொரு நிர்வாக அமைப்பாகச் செயற்பட முன்வந்திருப்பது ஆலயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளது.

கடந்த காலத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளை மறந்து எல்லோரும் ஓர் அமைப்பாக ஒற்றுமையாகச் செயற்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

பின்வருவோர் புதிய நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் இ.ஜெயராசா, உபதலைவர் சு.மனோகரன், செயலாளர் எஸ்.ரி.பரமேஸ்வரன், உப செயலாளர் த.சற்குணராசா, பொருளாளர் கு.கிருபாரட்ணம், உப பொருளாளர் க.நடராசா பதினாறு பேர் கொண்ட நிர்வாகக்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (10)

# உறுப்பினர்கள் சமுகமளிக்காததால் பொதுச்சபைக் கூட்டம் ஒத்திவைப்பு

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெறுவதாக உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டபோதிலும், பெரும்பாலான பொதுச்சபை உறுப்பினர்கள் வருகை தராததால் வந்தவர்களின் வேண்டுகோளுக்கிணங்க எதிர்வரும் 27 ஆம் திகதி மீண்டும் பொதுச்சபைக் கூட்டத்தை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

இக் கூட்டத்தில் சங்கத்தின் நிதி நிலைமை பற்றி ஆராய்ந்து அது தொடர்பான பிரச்சினைகள் குறித்தும், சங்கத்தின் கடனை எவ்வாறு தீர்ப்பது என்பது குறித்தும் ஒரு தீர்க்கமான முடிவு எடுக்கப்படவுள்ளது.

எனவே குறித்த தினத்தன்று சங்கத்தின் சகல உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் மேலும் கேட்டுள்ளார். (104)

# மோசமாகப் பாதிப்படைந்துள்ள யாழ். இந்து ஆரம்ப பாடசாலை வீதி

(கொக்குவில்)

யாழ். கஸ்தூரியார் வீதியில் இருந்து ஆரம்பப் பாடசாலை அமைந்துள்ள பகுதி வீதி போககுவரத்துக்குப் பாவிக்க முடியாத அளவுக்கு மிகவும் மோசமாகச் சேதமடைந்து போயுள்ளது.

அப்பகுதியில் மேலும் தனியார் கல்வி நிலையங்களும் இயங்கி வருகின்றன. மேற்படி கல்விச் சாலைகளில் கல்வியைப் பெறச் செல்லும் சிறார்கள், அவர்களை வாகனங்களில் ஏற்றிச் செல்வோர் மிகுந்த அசௌகரியங்களுக்குத் தினமும் ஆளாக நேர்வதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

வருடம் ஆரம்பிப்பதற்கு முன்பாக சில மாதங்களும், புது வருடம் பிறந்து இரண்டு மாதங்களும் கழிந்துவிட்ட நிலையிலும் இதுவரை மேற்படி வீதி திருத்தப்படாமல் இருந்து வருவதால் கல்வி கற்கச் செல்லும் சிறார்கள் சொல்லொணாத் துயரங்களைத் தாங்க நேரிடுவதாகத் தெரிய வருகிறது. (68)

# சான்றிதழ் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையால் நடத்தப்படும் நூல் வெளியீட்டு விழாவும், கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச பணியாளர்களுக்கான கணக்கு வைத்தல் சம்பந்தமான பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நாளை காலை 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண் டபத்தில் நடைபெறவுள்ளது. (70)

## ஆதினியின் இன்றைய பலன்

(08.03.2011 – செவ்வாய்க்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி மாசி 24

இராகுகாலம் 3.24 – 4.54, சுபநேரம் 10.54 – 12.24, திருதியை மு.ப.8.43, ரேவதி மு.ப.10.15, சித்தாமிர்தம், சதுர்த்திவிரதம், உலக மகளிர் தினம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– நண்பர் உதவி, மகிழ்வான கற்பனை, முயற்சி பலிதம்.

ரிஷபம்:– சுகமான சிந்தனைகள், ஆரோக்கிய விருத்தி, கௌரவிக்கப்படல்.

மிதுனம் :– பொருள் வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, காரிய சித்தி.

கடகம்:– மகிழ்ச்சிப் பெருக்கு, மேலாளர் உதவி, காரிய சித்தி.

சிம்மம்:– புதிய முதலீடு, பணவரவு, சன்மானம் கிடைத்தல்.

கன்னி :– காரியத்தடை, மனக் குழப்பம், அவமானப்படல்.

துலாம் :– ஆரோக்கிய விருத்தி, விருந்துணவு, உறவினர் சேர்க்கை.

விருச்சிகம்:– கொண்டாட்டம், நண்பர் சேர்க்கை, மகிழ்ச்சிப் பெருக்கு.

தனுசு:– போட்டிகளில் வெற்றி, பாராட்டப்படல், பொருள் வரவு.

மகரம்:– ஆலய வழிபாடு, உதவிகள் செய்தல், கற்பனை மிகுதி.

கும்பம் :– தொழிலில் லாபம், எதிர் பாலார் உதவி, மேன்மையான நிலை.

மீனம்:– காரியக்கேடு, வாக்குவாதம், பகை அதிகரித்தல்.

# வைத்தியசாலைப் பாதுகாவலரை பெண் தாக்கியதால் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் விடுதிகளுக்கு இடைநேரங்களில் உணவுப் பொருட்களைக் கொண்டு சென்று விற்கும் பெண் ஒருவர் வைத்தியசாலைப் பாதுகாவலர்களைத் தாக்கிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது வைத்தியசாலை விடுதிகளுக்குள் சென்று உணவுப் பொருட்களை விற்பனை செய்வதற்காக நேற்று முன்தினம் 2.30 மணியளவில் வைத்தியசாலைக்கு வந்த பெண்ணைப் பாதுகாவலர்கள் உட்செல்ல அனுமதிக்காததால் ஆத்திரமடைந்த பெண் பாதுகாவலர்களைத் தாக்கியதுடன் தகாத வார்த்தைகளால் ஏசியுமுள்ளார்.

அப்போது அங்கு விரைந்த இராணுவத்தினர் அந்தப் பெண்ணைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இதனை அறிந்த வைத்தியசாலை பாதுகாவலர்கள் அவரை மன்னித்து விடும்படி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர் வைத்தியசாலையை விட்டு வெளியேற்றப்பட்டார். (மி)

# வலி.தென்மேற்கு செயலக பிரிவில் முதியோர் மகாசங்கம் அங்குரார்ப்பணம்

(ஆனைக்கோட்டை)

வலி தென்மேற்கு சண்டிலிபபாய் பிரதேச செயலக பிரிவிலுள்ள முதியோர் சங்கங்களுக்கான மகாசபைச் சங்கம் ஒன்று கடந்த 5 ஆம் திகதி பிரதேச செயலர் ம.எழிலரசி தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இவ் அங்குரார்ப்பண நிகழ்வில் குறித்த பிரிவிலுள்ள சகல முதியோர் சங்கங்களும் பங்குபற்றின.

அத்துடன் இம்மகா சபைச் சங்கம் சகல முதியோர் சங்கங்களுக்கும் தேவையான உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல், ஆலோசனை வழங்குதல் மற்றும் இயங்காமல் இருக்கும் சங்கங்களை இயங்கச் செய்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராஜா, சமூக சேவை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர். அத்துடன் சங்கத்தின் புதிய நிர்வாக உத்தியோகத்தர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு மாதமும் இச் சங்கம் கூடி முதியோர் சங்கங்களின் குறைபாடுகள் குறித்து ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிகழ்வில் முதியோர் சங்கங்களுக்கான கைநூல் ஒன்றும் வழங்கப்பட்டது. (104)



யாழ். பாதுகாப்புப் படைகளின் தலைமை அலுவலக நலன்புரி அதிகாரி பிரிகேடியர் ஆர்.றொட்ரிக்கோவிற்கும். யாழ். பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுக்காலை யாழ். சிவில் விவகார பொதுமக்கள் தொடர்பு அலுவலகத்தில் நடைபெற்றபோது ....

(படங்கள்:பார்தீபன்)

# 105ஆவது 'வடக்கின் பெரும் போர்' வெற்றியைச் சுவைக்கும் அணி எது?

## சென் ஜோன்ஸ் அணி விபரம்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படுகின்ற மூன்று நாட்களைக் கொண்ட இனிங்ஸ் போட்டி வரும் 10ஆம், 11ஆம், 12ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.


யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் யாழ். மத்திய கல்லூரி அணிக்கும் இடையில் இடம்பெற்று வரும் இப்போட்டி 105ஆவது ஆண்டாக நடைபெறவுள்ளது.

இரு அணிகளுக்குமிடையில் கடந்த 1904ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் இப்போட்டி, தேசிய ரீதியில் முதன்மை பெற்றதுடன் மிகப் பெரும் வரலாற்றைக் கொண்டதாகும்.


இப்போட்டித் தொடரில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 33 வெற்றிகளைப் பதிவாக்கி, அதிக தடவைகள் வெற்றி பெற்ற கல்லூரி என்ற சிறப்பையும் பெற்றுள்ளது.

அத்துடன் இந்த ஆண்டில் நடைபெற்ற போட்டிகளில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி சிறப்பான ஆட்டத்திறனை வெளிப்படுத்தியுள்ளது. எனவே, இந்த 105ஆவது வடக்கின் பெரும் போர் ரசிகர்களுக்கு பெரும் விருந்தாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எஸ்)



ஆனந்தகுமார் விதுஷன்
(அணித் தலைவர்) சகலதுறை வீரர்



விவேகானந்தராசா ஹரிவதனன்
(உப தலைவர்) சகலதுறை வீரர்



சத்தியமூர்த்தி சஞ்ஜீவன்
அதிரடித் துடுப்பாட்ட வீரர்



சிங்கராசா டக்ஷன்
ஆரம்பப் பந்து வீச்சாளர்



சிறீதரன் பிரியதர்ஷன்
சுழற்பந்து வீச்சாளர்



ஜேசுதாசன் அட்ரியன்
ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்



சூசைதாசன் அலெக்ஸ்டியோன்
மிதவேகப் பந்துவீச்சாளர்


மகாசிங்கம் மதுஷன்
சுழற்பந்து வீச்சாளர்



ஜெயகுமார் அமிதயான்
மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர்



அலி அக்பர் சன்சஜான்
ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்



சஜீந்திரன் ரஜீந்தன்
விக்கெட் காப்பாளர்



விவேகானந்தராசா ஹரிகரன்
சுழற்பந்து வீச்சாளர்



சிவம் சத்தியேந்திரா
சுழற்பந்து வீச்சாளர்



துரைராஜசிங்கம் விமல்ராஜ்
மிதவேகப் பந்து வீச்சாளர்


பரமானந்தம் துவாரகசீலன்
மிதவேகப் பந்து வீச்சாளர்


சஜீந்திரன் கபில்ராஜ்
துடுப்பாட்ட வீரர்


ஏப்ரஹாம் அனோஜன்
சகலதுறை வீரர்


அந்தோனிப்பிள்ளை நிஷாந்தன்
மிதவேகப் பந்து வீச்சாளர்


தங்கராசா கபிலன்
மிதவேகப் பந்து வீச்சாளர்




## உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2011

கடந்த நான்காம் திகதி மேற்கிந்தியத்தீவுகள் மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையில் நடைபெற்ற 'பி' பிரிவு ஆட்டம் மேற்கிந்தியத்தீவுகளுக்கு அபாரமானதொரு வெற்றியைக் கொடுத்தது. இவர்களின் வெற்றி என்பதற்கு அப்பால் பங்களாதேஷ் அணியின் தோல்வி என்பதுதான் மிகப் பெரும் அதிர்ச்சியாக இருந்தது.

மிகவும் திறமையான வேகமாக வளர்ந்து வரும் ஒரு அணி என்று பெயர் பெற்ற இவர்கள் 58 ஓட்டங்களுக்குள் தம் மண்ணிலேயே சுருண்டார்கள் என்றால் அதிர்ச்சி இல்லாமல் வேறென்ன ஏற்பட முடியும். மறுபுறமாக மூன்றே மூன்று பந்து வீச்சாளர்கள் பத்து விக்கெட்டுக்களையும் 18 ஓவர்களில் தட்டிப் பறிப்பது என்பது மேற்கிந்தியத்தீவுகளின் திறமையைத்தானே காட்டி நிற்கிறது. கீமர் றோச் மற்றும் டரன் சமி தலா மூன்று இலக்குகளைச் சரிக்க, மறுபுறம் சுழற் பந்து வீச்சாளர் சுலைமான் பென் நான்கு இலக்குகளைச் சரிக்க பங்களாதேஷின் கர்ச்சனை ஓய்ந்தது.

பங்களாதேஷ் அணியின் யுனைட சித்திக் மட்டுமே அதி கூடுதலாக 25 ஓட்டங்கள் பெற்றார்.

தாயகத்தில் படுதோல்வி கண்ட பங்களாதேஷ் அணி மீது ரசிகர்களுக்குக் கடும் கோபம். இதனால் சில வேண்டத்தகாத சம்பவங்களும் நடைபெற்றுவிட்டன. இவை தவிர்க்கப்படவேண்டும். ரசி




தினமொரு தகவல்

ICC Cricket World Cup 2011

கர்களின் நடத்தை நாட்டின் நற்பெயருக்கே களங்கத்தை ஏற்படுத்தும்.

அதுபோக முன்னொரு காலத்தில் பாகிஸ்தானை வீழ்த்தினோம் இந்தியாவை வீழ்த்தினோம். அவுஸ்ரேலியாவை வீழ்த்தினோம் என்று பழைய பெருமையைப் பற்றி யோசித்துக் கொண்டிருப்பதைவிட இனி என்ன செய்யப் போகிறோம் என்று திட்டமிடுவதே சிறந்தது.

பங்களாதேஷ் அணித் தலைவர் இன்னும் கூட காலிறுதி ஆட்டங்களுக்குத் தகுதி பெறும் நம்பிக்கையை இழக்கவில்லை.

ஆனால், இனிச் சந்திக்கப் போகும் அணிகள் இங்கிலாந்து (அம்மாடியோவ்), நெதர்லாந்து மற்றும் தென்னாபிரிக்கா. இவர்கள் மூவரையும் வென்றால் காலிறுதி நிச்சயம். ஆனால், வரிசை மிகக் கடுமையாக இருக்கும் போலத் தெரிகின்றது.

என்றாலும் பங்களாதேஷ் தன்னம்பிக்கையுடன் களம் இறங்கினால் எதிர்பார்ப்புகள் நிறை வேறும். முடிவுகள் எதிர்பாராமல் மாறும். பல ஆட்டங்கள் அதிரடித் திருப்பங்களாக அல்லவா இருக்கிறது. பங்களாதேஷ் அணியை வாழ்த்துவோம்.

ஜோசப் கிருஷ்ணா

## நெருக்கடி இல்லை

இங்கிலாந்துடனான தோல்வி எங்களுக்கு நெருக்கடியையோ அல்லது அழுத்தத்தையோ ஏற்படுத்தவில்லையென தென்னாபிரிக்க அணித் தலைவர் ஸ்மித் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த ஆடுகளத்தில் துடுப்பெடுத்தாடுவது மிகவும் கடினமாக இருந்தது. ஆண்டர்சன், பிராட் சிறப்பாக பந்து வீசி எங்கள் அணிக்கு நெருக்கடி கொடுத்தனர். டிவில்லியர்ஸ், பெலிசிஸ் ஆட்டமிழந்ததே தோல்விக்குக் காரணமாக இருந்தது என்றார்.

### தினமுரசு குடும்பத்தினர் பங்குபற்ற முடியாது.

1) மார்ச் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தியா மற்றும் நெதர்லாந்து அணிகளுக்கிடையிலான போட்டியில் வெல்லப்போகும் அணி எது?

2) இப்போட்டியிள் ஆட்டநாயகனாகும் வீரர் யார்?

பெயர்: ..........

முகவரி : ..........

போ.இல : ..........

விடைகள் : 01) ..........

02) ..........

**போட்டி இல: 19**

தினமொரு பரிசுப் போட்டியில் வெற்றிபெற்றோர் விபரம் விரைவில் அறிவிக்கப்படும்


உங்கள் விடைகளை பின்வரும் விலாசங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலும் இடலாம்.

தினமுரசு காரியாலயம்
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தினமுரசு விளம்பரப்பணிமனை
M.P.C.S. கட்டடம்
127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

விடைகளை 09 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவையுங்கள்.

## அதிகரித்த நம்பிக்கை



(பெங்களூர்)

அயர்லாந்துடனான போட்டியின் மூலம் என் மீதான நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என யுவராஜ்சிங் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: எனது பந்து வீச்சு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. ஆட்டத்தை முடித்து வைத்தது சந்தோசம். அயர்லாந்து அணி சிறப்பாக விளையாடி எங்களுக்கு நெருக்கடி கொடுத்தது. 5 விக்கெட் கைப்பற்றியதன் மூலம் என் மீது அதிக நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. சிறப்பாகத் துடுப்பெடுத்தாடியது மகிழ்ச்சி என்றார்.

இதேவேளை, உலக கோப்பையில் 5 விக்கெட் கைப்பற்றி அரைச் சதம் அடித்த முதல் வீரர் என்ற சிறப்பையும் யுவராஜ்சிங் பெற்றுக் கொண்டார்.

ICC Cricket World Cup 2011

### இன்றைய ஆட்டம்

நியூசிலாந்து எதிர் பாகிஸ்தான்

மைதானம் :கொழும்பு.பகலிரவு ஆட்டம்

## கடுமையான அழுத்தம்



(பெங்களூர்)

அயர்லாந்து அணி கடுமையான அழுத்தத்தைக் கொடுத்தது என இந்திய அணித் தலைவர் டோனி தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

பந்து வீச்சாளர்கள் மிகவும் சிறப்பாக பந்து வீசி தங்கள் பணியைச் செய்தனர். ஒவ்வொரு ஆட்டத்திலும் இந்தியாவின் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பந்து வீச்சில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. சிலரது களத்தடுப்பு இன்னும் அப்படியே இருக்கிறது. அதில் முன்னேற்றம் தேவை. அயர்லாந்து அணி கடுமையான அழுத்தத்தைக் கொடுத்தது. அவர்களது களத்தடுப்பு மிகவும் அபாரமாக இருந்தது என்றார்.

## பீட்டர்சன் அவுட்

(சென்னை)


குடல் இறக்க நோயினால் அவதிப்படும் இங்கிலாந்து வீரர் கெவின் பீட்டர்சன் உலகக் கிண்ணப் போட்டிகளிலிருந்து விலகி நேற்றைய தினம் இங்கிலாந்துக்குச் சென்றுள்ளார்.

பீட்டர்சனுக்குப் பதிலாக மிடில்செக்ஸ் கழகத்தின் துடுப்பாட்ட வீரர் இயொன் மோர்கன் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மருத்துவர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமையவே பீட்டர்சன் நாடு திரும்புவதாக அணியின் பயிற்சியாளர் அன்டி பிளவர் தெரிவித்தார்.


உலகக் கிண்ணத் தொடரின் இடையிலிருந்து வெளியேறுவது மிகவும் கவலை தரும் விடயம். இந்திய மக்களையும், அவர்களது வரவேற்பையும் மறக்க முடியாது என பீட்டர்சன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தென்னாபிரிக்க அணியுடனான வெற்றி எங்கள் அணியின் ஒருங்கிணைந்த விளையாட்டுக்குக் கிடைத்த பரிசாக அமைந்து எனவும் அவர் தெரிவித்தார்.



இதேவேளை, பீட்டர்சனின் வெளியேற்றத்தை அடுத்து அவர் களமிறங்கும் ஆரம்ப இடத்திற்கு ரவி போபரா அல்லது இயன் பெல் இருவரில் ஒருவரைக் களமிறக்க இங்கிலாந்து அணி ஆலோசித்து வருகிறது தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மகிழ்ச்சி தந்த தெரிவு



(சென்னை)

அதிர்ஷ்டவசமாக ஆடும் 11 அணியில் எனக்கு இடம் கிடைத்தது மகிழ்ச்சி தந்தது என இங்கிலாந்து வீரர் ரவி போபார தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

திறமையான துடுப்பாட்ட வீரர்களைக் கொண்ட எங்கள் அணியில் 15 ரன்னுக்கு 3 விக்கெட்டுகள் என்ற நிலையில் நான் களம் காண்பேன் என்று எதிர்பார்க்கவில்லை.

பந்து இந்த அளவுக்கு சுழன்றது ஆச்சரியமாக இருந்தது. நானும், ஜோனதன் டிராட்டும் களத்தில் நின்ற போது, இந்த ஆடுகளத்தில் ஓட்டங்கள் எடுப்பது எளிதான காரியம் இல்லை என்பதை உணர்ந்தோம். 200 ஓட்டங்கள் வரை எடுத்தாலே எதிரணி விரட்டிப் பிடிப்பது கடினம் என்று நினைத்தோம்.

அதுபோல் நடந்து இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

அடுத்து வரும் போட்டிகளில் விளையாடும் 11 பேருக்குள் எனக்கும் இடம் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றேன். எனக்கான வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தி அணியின் வெற்றிக்குத் துணைபுரிவேன் என்றார்.

## தினமுரசு கென்யா எதிர் கனடா SCORE CARD

மைதானம் : புதுடில்லி திகதி : 07-03-2011

ICC Cricket World Cup 2011

நாணயச் சுழற்சி வெற்றி கென்யா : முதலில் துடுப்பாட்டம்.

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) எம்.ஏ. ஒவ்மா | c பெய்ட்வான் b ஒசின்டே | 00 |
| 02) ஆர். வோட்டர்ஸ் | b ஒசின்டே | 02 |
| 03) சீ.ஓ. ஒடியா | b பெய்ட்வான் | 31 |
| 04) டி.ஓ. ஒடியா | c பகாய் b ஒசின்டே | 02 |
| 05) எஸ்.டி கோலோ | lbw b சீமா | 12 |
| 06) ரீ. மிஸ்ரா | c சர்காரி b டேவிசன் | 51 |
| 07) கே. கமாண்டே | c பகாய் b பாலாஜிராவ் | 22 |
| 08) ரீ. ஒடோயோ | b பெய்ட்வான் | 51 |
| 09) என். ஒடியாம்போ | b ஒசின்டே | 04 |
| 10) இ.ஒற்றினோ | c ஹன்ஸ்ரா b சீமா | 08 |
| 11) ஜே. நிகோஜி | not out | 01 |
| உதிரிகள் | (lb 4, w 10) | 14 |
| மொத்தம் | (all out :50 ஓவர்கள்) | 198 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) ஆர். குணசேகரா | st ஒவ்மா b நிகோஜி | 18 |
| 02) ஆர். சீமா | b ஒற்றினோ | 17 |
| 03) இ. சர்காரி | run out (கமாண்டே) | 10 |
| 04) ஏ.பகாய் | not out | 64 |
| 05) எஸ். ஹன்ஸ்ரா | c நிகோஜி b ஒடியாம்போ | 77 |
| 06) ஜி.கோர்டன் | b ஒடியாம்போ | 03 |
| 07) எம். டேவிசன் | not out | 04 |
| 08) எஸ். பெய்ட்வான் | | |
| 09) ஏ. தேசாய் | | |
| 10) எச். ஒசின்டே | | |
| 11) ப. பாலாஜிராவ் | | |
| உதிரிகள் | (b1, w11, nb1) | 13 |
| மொத்தம் | (5 W; 45.3 ஓவர்கள்) | 199 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| எச். ஒசின்டே | 10 | 26 | 04 |
| பெய்ட்வான் | 10 | 41 | 02 |
| சீமா | 09 | 30 | 02 |
| பாலாஜிராவ் | 1 | 36 | 01 |
| டேவிசன் | 05 | 26 | 01 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| ரீ. ஒடோயோ | 05 | 18 | 00 |
| இ. ஒற்றினோ | 8.3 | 45 | 01 |
| என். ஒடியாம்போ | 10 | 45 | 02 |
| ஜே. நிகோஜி | 10 | 26 | 01 |
| கே. கமாண்டே | 05 | 25 | 00 |

5 விக்கெட்டுக்களால் கனடா அணி வெற்றி. ஆட்டநாயகன் : ஒசின்டே

## கனடா முதல் வெற்றி

(புதுடில்லி)

கென்யா அணிக்கெதிரான போட்டியில் கனடா அணி நேற்று முதல் வெற்றியைப் பதிவாக்கியுள்ளது. பத்தாவது உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் நேற்றைய ஆட்டத்தில் கென்யா, கனடா அணிகள் புதுடில்லி மைதானத்தில் மோதின.

பகலிரவு ஆட்டமாக நடைபெற்ற இப்போட்டியில், முதலில் ஆடிய கென்யா அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய கனடா அணி 45.3 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றிலக்கை அடைந்தது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஒசின்டே தெரிவானார்.



அனுசரணையாளர்:

ICC Cricket World Cup 2011



EUT தளபாட விற்பனை நிலையம்

அலுவலக மேசைகள், கணினி மேசைகள், கதிரைகள், சுழல்கதிரைகள், பலவகைப்பட்ட அலுவலக அலுமாரிகள், T.V. Stand வகைகள், சோபா செற்றிகள், சாப்பாட்டுமேசைகள், றெசின் டேபிள்கள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

காட்சியறை
EUT தளபாட விற்பனை நிலையம்
இல: 270, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 567 7478

Head Office
Chunnakam East
Chunnakam



(C/601)

# கூட்டணியில் தி.மு.கவை தக்கவைக்க அமைச்சர் பிரணாப் முகர்ஜி தீவிர முயற்சி



(சென்னை)

காங்கிரஸ் கட்சி 63 தொகுதிகள் கேட்டதோடு மட்டுமன்றி ஆட்சியிலும் பங்கு தர வேண்டும் என்று வலியுறுத்தியதால் தி.மு.க. மத்திய அரசிலிருந்து விலகும் முடிவை எடுத்தது. மத்திய அரசுக்கு இனி பிரச்சினைகளின் அடிப்படையில் மட்டும் ஆதரவு தருவது என்றும் தி.மு.க. தீர்மானித்துள்ளது.

தி.மு.க.வின் இந்த முடிவு பற்றி தமிழக காங்கிரஸ் தலைவர்கள் யாரும் வாயைத் திறக்கவில்லை. இதனால் தி.மு.க. காங்கிரஸ் கூட்டணி விரிசல் தொடர்பாக பரபரப்பான சூழ்நிலை நீடித்தது. இந்த நிலையில் காங்கிரஸ் மூத்த தலைவர் பிரணாப்முகர்ஜியும், தமிழ் நாடு காங்கிரசின் மேலிட பொறுப்பாளர் குலாம்நபி ஆசாத்தும் சந்தித்து தமிழக அரசியல் நிலவரம் குறித்தும் விவாதித்தனர்.

சுமார் ஒரு மணி நேரம் இந்த ஆலோசனை நடந்தது.

அதன் பிறகு முதலமைச்சர் கருணாநிதியுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள பிரணாப் முகர்ஜி முயன்றார். அதற்குப் பலன் கிடைக்கவில்லை. இதை யடுத்து பிரணாப் முகர்ஜி தொலைபேசியில் டி.ஆர்.பாலுவுடன் தொடர்பு கொண்டு பேசினார்.

அப்போது அவர், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் இருந்தும், மத்திய மந்திரி சபையிலிருந்தும் தி.மு.க. விலகும் முடிவை மறுபரிசிலனை செய்ய கருணாநிதியிடம் தகவல் தெரிவிக்க கேட்டுக் கொண்டார்.

காங்கிரசுக்கு சற்று கால அவகாசம் தர வேண்டும் என்றும் டி.ஆர். பாலுவிடம் பிரணாப் முகர்ஜி வேண்டுகோள் விடுத்தார். அதற்குப் பதில் அளித்த டி.ஆர்.பாலு, மந்திரி சபையிலிருந்து தி.மு.க. விலகுவது என்ற முடிவு உயர் நிலை செயல் திட்டக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவாகும்.

தற்போதைய சூழ்நிலைகள் எல்லாவற்றையும் பரிசீலித்து, நீண்ட யோசனைக்குப் பிறகே இந்த முடிவு எடுக்கப்பட்டது. உங்கள் கருத்தை எங்கள் கட்சித் தலைவரிடம் தெரிவிக்கிறேன் என்றார்.

இதற்கிடையே காங்கிரஸ் தலைவர்கள் சிலர், ரகசியமாக தி.மு.க.வுடன் தொடர்பு கொண்டு பேசி வருகிறார்கள். இதில் சமரசம் ஏற்பட்டு விடும் என்று தமிழக காங்கிரஸ் தலைவர்களில் ஒருசாரார் நம்பிக்கையுடன் உள்ளனர்.

## அரசு முறைப் பயணங்களை தேர்தல் பணிக்கு இணைக்கக்கூடாது

### தேர்தல் ஆணையம் உத்தரவு

அரசுப் பணி ரீதியான பயணங்களையும், தேர்தல் பணிகள் மற்றும் தனிப்பட்ட சொந்தப் பணிகளையும் அமைச்சர்கள் இணைக்கக்கூடாது என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.


இதுகுறித்து மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி பிரவீன் குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அரசுப் பணிகள் சார்ந்த பயணங்களையும், தேர்தல் பணிகள் மற்றும் தனிப்பட்ட சொந்தப் பணிகளையும் அமைச்சர்கள் ஒருங்கிணைக்கக் கூடாது என்று தேர்தல் ஆணையம் கண்டிப்பாக உத்தரவிட்டுள்ளது. மேலும் அரசியல் ரீதியான பணிகளுக்கு அரசு கார்கள் உள்ளிட்ட வாகனங்களையும், அரசு நிதியில் பணியாளர்களை நியமித்துப் பயன்படுத்துவதும் கூடாது.

மத்திய இணை அமைச்சர்கள் தங்களது சொந்த, அரசியல் ரீதியிலான பயணத்தின்போது அரசு வாகனங்கள், அலுவலக உதவி ஆகியவற்றை வழங்கக் கூடாது. அரசுப் பணிக்காக பயணங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தால், அரசு தலைமைச் செயலர், மத்திய அரசுச் செயலரால் முன்னதாகவே சான்றுரைக்கப்பட வேண்டும்

மாநில அமைச்சர்கள் தேர்தல் காலத்தில் அரசு ரீதியான பயணங்களை மேற்கொள்ளக் கூடாது. பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டிய அமைச்சர்களின் பட்டியலில் இடம் பெற்றிருந்தால் தவிர அரசு வாகனங்கள், பாதுகாப்பு வாகனங்கள் அனுமதிக்கப் படாது.

அமைச்சர்கள் தங்களது பயணத்தின்போது தனியார் வாகனங்களில் எச்சரிக்கை ஒலி மற்றும் சுழலும் விளக்குகளைப் பயன்படுத்தக்கூடாது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.




# காங்கிரஸ் கட்சியைத் தோற்கடிக்க பெரும்பாலானோர் தயாராகி விட்டனர்

காங்கிரஸ் கட்சிக்கு எதிர் காலம் இல்லை. ஆந்திராவில் காங்கிரஸ் கட்சியைத் தோற்கடிக்க பெரும்பாலான மக்கள் தயாராகி விட்டனர் என, சந்திரபாபு நாயுடு பேசினார்.

ஆந்திர மாநிலம் அனந்தபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பிரஜாராஜ்யம் கட்சியினர் 1000 பேர் ஐதராபாத்தில் சந்திரபாபு நாயுடு முன்னிலையில் தெலுங்கு தேசம் கட்சியில் இணைந்தனர். இந்த நிகழ்ச்சியில் சந்திரபாபு நாயுடு பேசியதாவது -

ஆந்திராவில் காங்கிரஸ் கட்சி ஊழலில் மூழ்கித் திளைக்கிறது. எனவே காங்கிரஸ் கட்சிக்கு எதிர்காலம் இல்லை.


ஆந்திராவில் காங்கிரஸ் கட்சியைத் தோற்கடிக்க மக்கள் தயாராகி விட்டனர். அதற்கான நாள் நெருங்கி விட்டது. சிரஞ்சீவி கட்சி ஆரம்பித்த 2 வருடங்களிலேயே அதைக் காங்கிரசுடன் இணைத்து விட்டார்.

இதேபோல் ஜெகன் மோகனும் தனது கட்சியை காங்கிரசுடன் இணைத்து விடுவார். காங்கிரஸ் கட்சி எல்லாக் கட்சிகளையும் விழுங்கி விடும். தெலுங்கானா ராஷ்டீரிய சமிதி கட்சியும் காங்கிரசுடன் இணையப் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது.

எல்லாக் கட்சிகளும் காங்கிரசுடன் இணைந்து ஒன்றுமில்லாமல் போவது உறுதி. காங்கிரசுக்கு எதிராக வாக்குப் போட மக்கள் தயாராகி உள்ளனர்.

காங்கிரசுக்கு எதிராக கட்சி தொடங்கிய 9 மாதங்களிலேயே தெலுங்கு தேசம் கட்சி ஆட்சியைப் பிடித்துள்ளது.

நான் தொடர்ந்து 9 ஆண்டுகளாக முதல்வராக இருந்துள்ளேன். ஆந்திராவில் தற்போது



யாரும் அது போல் இருந்தது கிடையாது. ஆந்திர முதல்வர் கிரண் குமார் ரெட்டியை அவரது மந்திரிசபையில் உள்ள மந்திரிகள் கூட யாரும் மதிப்பது கிடையாது. அடுத்த தேர்தலில் மாநிலத்தில் தெலுங்கு தேசம் கட்சியும், மத்தியில் கூட்டணி கட்சிகளும் ஆட்சியைப் பிடிக்கும் என்றார்.



# குறள் சொல்லும் கதைகள் -31

### இன்பத்துப் பால்

## மென்மையானவள்

கஜேந்திரன் அன்று மாலை தனது தந்தையார் செய்யும் வலுக்குச் சென்றான். கஜேந்திரனின் தந்தையார் பொன்னம்பலம் ஒரு விவசாயி. உச்சுவில் குளக்கரையில் அவரது வயல் இருந்தது. மிகவும் அவதானமாக அவர் உழுது பசளையிட்டு நெல் விதைப்பதால் அவருக்கு அமோக விளைச்சல் வருடா வருடம் ஏற்படும் வயலில் இருந்து கிடைக்கும் நெல் அவரது குடும்பத்தின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்து வந்தது.

கஜேந்திரன் ஓய்வு கிடைக்கும் வேளைகளில் வயலுக்குச் சென்று தகப்பனுக்கு உதவி செய்வான். அன்று வயலில் களை எடுப்பு நடைபெற்றது. களை எடுக்கும் பெண களுக்கு கஜேந்திரனின் தாயார் உணவும் தேநீரும் கொடுத்ததால் அதைக் கொண்டு சென்றான்.

வயல் ஆரம்பமாகும் இடத்தில் தனது துவிச்சக்கர வண்டியை நிறுத்திய கஜேந்திரன், உணவுப் பொதியையும் தேநீர்க் கலத்தையும் எடுத்துக்கொண்டு வயல் வரம்பில் நடக்கத் தொடங்கினான். அந்த வரம்பால் அவர்களது வயலுக்கு ஒரு மைல் தூரம் நடந்து செல்ல வேண்டும்.

வயல்களில் பல பெண்கள் களை பிடுங்கிக் கொண்டிருந்தனர். வரம்பின் மேல் வெள்ளம் நின்றது. அவதானமாக அவன் நடந்து கொண்டிருந்தான். வயல் வரம்புகளில் முள்ளிச் செடிகள் நின்றன. உயரமாகச் சிலர் வரம்பு கட்டியதால் அவ்வரம்பில் நீர் நிற்கவில்லை. அதனால் நீரில் நின்ற தவளைகள் வரம்பில் இருந்தன. கஜேந்திரன் நடந்து வரும் அரவச் சத்தம் கேட்டதும் அவை வயலில் இருந்த நீருள் பாய்ந்தன. வரம்பில் படுத்திருந்த சில நீர்ப்பாம்புகள் அவசர அவசரமாக நெளிந்து நீருள் இறங்கின.

நீரில் இறங்கிய பாம்பு ஒன்று வயல் வரம்பில் இருந்து பாய்ந்த மிகவும் சிறிய தவளை யொன்றைக் கௌவியது.

வரம்பில் இருந்த வயல் எலி ஒன்று நீருள் பாய்ந்து நீந்திச் சென்றது. அதன் வால் மிகவும் நளினமாக அசைந்தது. அது நீந்திச் செல்லும் அழகைச் சில கணங்கள் பார்த்து ரசித்தான் கஜேந்திரன். அவன் இயற்கையை ரசிபதில் விருப்பமுடையவன். அதனால் அவன் பௌர்ணமித் தினங்களில் வயலுக்குச் செல்வான். நிலவு உள்ள நாட்களில் வயல்க் காவலுக்குச் செல்வது அவனுக்குப் பிடிக்கும்.

நெற் பயிர்கள் காற்றில் மிகவும் மெதுவாக அசைந்தன. மிகவும் பரந்த கடல் பச்சை நிறத்தில் அலை அடிப்பதைப்போல நெற்பயிர்கள் அழகாக அசைந்தன. குளிர்மையாக வீசிய காற்று கஜேந்திரனின் உடலில் ஊசிபோலக் குத்தியது.

அவர்களது வயலில் பல பெண்கள் களை பிடுங்கிக் கொண்டு நின்றனர். கஜேந்திரனைக் கண்டதும் பொன்னம்பலம் வயலில் களை பிடுங்கும் பெண்களை உணவு உண்ண வருமாறு அழைத்தார். கஜேந்திரன் உச்சுவில் குளக்கட்டில் ஏறி அமர்ந்தான். குளக்கட்டோடு அவர்களின் வயல் இருப்பதால், வயலுக்கு ஒருபோதும் நீர்ப்பஞ்சம் ஏற்படுவதில்லை. வயலில் வரம்புகளிலும் குளக்கட்டின் கீழ்ப் பகுதியிலும் பொன்னம்பலம் காய்கறிச் செடிகளை நட்டிருந்தார். மாரி காலத்தில் காய்கறி வகைகளுக்குத் தட்டுப்பாடு உண்டாகும். ஆனால் பொன்னம்பலத்தின் வீட்டிற்குக் காய்கறித் தட்டுப்பாடு ஏற்படுவதில்லை.

குளத்துள் ஏராளமான செந்தாமரைப் பூக்களும் வெண் தாமரைப் பூக்களும் மலர்ந்திருந்தன. குளக்கட்டில் ஏராளமான அனிச்சம் பூக்கள் மலர்ந்திருந்தன. கஜேந்திரன் வயலுக்கு வந்தால் அனிச்சம் பூக்களைப் பார்க்காமல் விடமாட்டான். மிகவும் அழகான அந்தப் பூக்களைக் கவிஞர்கள் பெண்களுக்கு ஒப்பிட்டுள்ளது.அவனுக்குத் தெரியும் அதனால் அவன் அப்பூக்களைப் பார்த்து ரசிப்பான்.

கவிஞர்கள் எவ்வளவு திறமைசாலிகள், அனிச்சம் பூவை எனது காதலியின் மென்மைக்கு ஒப்பிட்டுள்ளனர். அவன் அனிச்சம்பூவைத் தொட்டுப் பார்த்தான். அது மென்மையாக இருந்தது. ‘அனிச்சம்மலரே, நீ மிகவும் மென்மைத் தன்மை உள்ளதாக இருக்கிறாய். நான் உன்னைத் தொட்டுப் பார்த்தேன். உன்னை விட எனது காதலி மென்மையானவள்’ என்று அவனது உதடுகள் முணுமுணுத்தன.

**கே.வி.குணசேகரம்**

நல்நீரை வாழி அனிச்சமே! நின்னினும்
மெல்நீரள் யாம்வீழ் பவள் (குறள் 1111)

அனிச்சம் மலரே, நீ நல்ல மென்மைத் தன்மையைப் பெற்றிருக்கிறாய்! நீ வாழ்க! நான் விரும்பும் பெண் உன்னைவிட மென்மையானவள்.

# கூட்டமைப்புடன் நடத்தும் பேச்சுக்கள் அரசாங்கத்திற்கு பலனளிக்க மாட்டாது

## ஜனாதிபதியின் ஆலோசகர் கோமின் தயாசிறி



(கொழும்பு)

கூட்டாட்சித் தீர்வினை அடைவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடும் முயற்சி எடுப்பதாகவும், தற்போது அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குமிடையில் இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தைகள் அரசாங்கத்திற்கு பயனளிக்கப் போவதில்லை எனவும் இலங்கை அரசு தலைவரின் ஆலோசகர் கோமின் தயாசிறி தெரிவித்துள்ளார்.

'திவயின' நாளிதழுக்கு அண்மையில் வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே மேற்கண்டவாறு கருத்துரைத்த தயாசிறி, தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு மீண்டும் பிரிவினைக்கான பாதையை அமைக்க முனைவதாகக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரபாகரனுடன் நெருக்கமாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று கையறு நிலைக்கு வந்துள்ளது. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதை விடுத்து, காவல்துறை அதிகாரத்தை அது கோரி வருகின்றது.

ஏனைய மாகாணங்களை விட ஒரு மாகாணத்திற்கென சிறப்பு அதிகாரங்களை வழங்க முடியாது. காணி மற்றும் காவல்துறை அதிகாரங்களைக் கோருவதானது பிரிவினைக்கான ஆயுதப்போராட்டத்தைத் தொடங்கும் நோக்கம் கொண்டதென தயாசிறி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மாகாணசபைகளுக்கு காவல்துறை அதிகாரங்கள் வழங்கப்படுவதைத் தடுப்பதற்கான சட்டங்களை அறிமுகப்படுத்துவது தொடர்பான ஆலோசனைகளை அவர் முன்வைத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

சிங்கள அரசியல்வாதிகளிலிருந்து தமிழ் அரசியல்வாதிகள் வேறுபட்டவர்கள் அல்ல. அவர்களும் தமக்குரிய அதிகாரத்தை ஏற்படுத்திக கொள்வதிலேயே முனைப்புக் கொண்டுள்ளனர். மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விரும்பவில்லை.

எனவே வடக்கு கிழக்கில் அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் அரசியல் கட்சிகள், தமது இருப்பினை உறதிப்படுத்திக்கொள்ளவே விரும்புகின்றனர்.

தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் பெரும்பாலான பிரச்சினைகள், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களாலும் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளே ஆகும். ஆனால் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

போர்முடிவடைந்து இரண்டு ஆண்டுகள் ஆகியுள்ள போதும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அரசாங்கம் தோல்வியுற்றுள்ளது. தற்போது அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குமிடையில் இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தைகள் அரசாங்கத்திற்கு பயனளிக்கப்போவதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# எண்பதுவீத இலங்கையர் அழைத்துவரப்பட்டனர்

(கொழும்பு)

லிபியாவில் ஏற்பட்டுள்ள குழப்பகர சூழ்நிலை காரணமாக நாடு திரும்புவதற்கு கோரிக்கை விடுத்த 80 சதவீதமானவர்கள் நாட்டிற்கு அழைத்துவரப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

அத்துடன் எதிர்வரும் இரண்டு நாட்களில் லிபியாவிலிருந்து 300 இலங்கையர்கள் நாட்டிற்கு அழைத்து வரப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

லிபியாவில் உள்ள இலங்கையர்களின் பாதுகாப்புக் குறித்து அந்த நாட்டுத் தூதுவருடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடி வருவதாக அமைச்சர் டிலான் பெரேரா கூறியுள்ளார்.

லிபிய அரசாங்கத்திற்கு எதிராக அந்த நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் எதிர்ப்பு ஆர்பாட்டங்களும், ஆர்பாட்டக்காரர்கள் மீது அரச படையினர் தாக்குதல் நடத்துவதும் நாளுக்கு நாள் உக்கிரமடைந்து செல்கின்றது.

இந்த நிலையில் லிபியாவில் பணிபுரிந்த இலங்கையர்கள் 500ற்கும் அதிகமானவர்கள் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

# சம்பூர் அனல் மின்நிலையக் கட்டுமானப் பணிக்கான புரிந்துணர்வு உடன்பாடு தாமதம் இந்தியா கவலை

(கொழும்பு)

சம்பூர் அனல் மின்நிலையக் கட்டுமானம் தொடர்பான புரிந்துணர்வு உடன்பாட்டைச் செய்து கொள்வதை இலங்கை அரசாங்கம் இழுத்தடித்து வருவதற்கு இந்தியா ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது.

அண்மையில் இலங்கையின் சக்தி, மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்கவைச் சந்தித்த இந்திய அரசு சார் நிறுவனமான- இந்திய அனல் சக்தி நிறுவன அதிகாரிகளே தமது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளனர்.

இலங்கை மின்சாரசபையுடன் இணைந்து இந்த நிறுவனமே சம்பூரில் அனல் மின் நிலையத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

தொழில்நுட்ப மற்றும் சட்டரீதியான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை இலங்கை அரசாங்கம் இழுத்தடித்து வருவது தொடர்பாக இந்திய நிறுவன அதிகாரிகள் கவலை தெரிவித்ததாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அத்துடன் சம்பூர் அனல்மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை கொள்வனவு செய்யும் விலை தொடர்பான பிரச்சினையும் தீர்க்கப்படாமல் உள்ளது.

மின்சக்தியின் விலை நிர்ணய விடயத்தில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்று சட்டமா அதிபர் எமக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்திய நிறுவன அதிகாரிகளுக்கு இந்தப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று உறுதி அளித்திருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

சம்பூர் அனல்மின் நிலையக் கட்டுமானப் பணிகளை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்படுவது குறித்து இந்திய அரசு நிறுவனம் கவலை வெளியிட்டுள்ளதை கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகமும் உறுதி செய்துள்ளது.

அதேவேளை, மன்னார் கடற்பரப்பில் எண்ணெய் அகழ்வில் ஈடுபடவுள்ள இந்திய- இலங்கை கூட்டு நிறுவனத்துக்கு சிறப்பு வரிச்சலுகைகளை வழங்க இலங்கை அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

கெய்ன் இந்திய நிறுவனத்தின் துணை நிறுவனமான கெய்ன் லங்கா நிறுவனத்துக்கே இந்தச் சலுகைகளை இலங்கை அரசாங்கம் வழங்கவுள்ளது.

கெய்ன் இந்திய நிறுவனத்துடன் இணைந்து 113 மில்லியன் டொலர் முதலீட்டில் எண்ணெய்க் கிணறுகளை அமைக்கும் உடன்பாட்டில் இலங்கை அரசாங்கம் கையெழுத்திட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, தந்திரோபாய அபிவிருத்தித் திட்டமாக வர்த்தமானி மூலம் பிரகடனம் செய்துள்ளார்.

இதன்மூலம் இந்த நிறுவனம் பெருமளவு வரிச்சலுகைகள், சுங்கத்தீர்வைச் சலுகைகளைப் பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு வருகை தந்துள்ள சீனவிமானப்படை உயர்மட்டக்குழு



(கொழும்பு)

சீன விமானப்படையின் செங்டு பிராந்திய வான் கட்டளைப் பணியக தலைமைத் தளபதி மேஜர் ஜெனரல் டிங் லாய்ஹங் தலைமையிலான உயர் மட்டக் குழுவொன்று இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளது.

சீன விமானப்படையின் மூத்த அதிகாரிகளான கேணல் ஜியாங் லிசேங், கேணல் சூ கான் ஆகியோரும் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இலங்கை வந்த இவர்கள் விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ஹர்ச அபேவிக்கிரமவை சந்தித்துப் பேசியுள்ளனர்.

கொழும்பிலுள்ள சீனத்தூதரக இராஜதந்திர விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரியாக உள்ள ஹன் தாவோ இந்தச் சந்திப்புக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

சீன விமானப்படையின் தொழில்நுட்ப உதவிகளை இலங்கை விமானப்படை பெற்றுக் கொள்வது குறித்து இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டதாகத் தெரிய வருகிறது.

அதேவேளை, இரத்மலானையில் நடைபெறும் இலங்கை விமானப்படையின் கண்காட்சியிலும் சீன விமானப்படை அதிகாரிகள் பங்கேற்றுள்ளனர்.

சீனாவின் செங்டு விமானத் தயாரிப்பு நிறுவனம் இங்கு காட்சிக் கூடத்தை அமைத்துள்ளது.

இந்த நிறுவனமே இலங்கை விமானப்படைக்கு எவ் -7 போர் விமானத்தை 1991ஆம் ஆண்டு விற்பனை செய்திருந்தது. பின்னர் இவற்றை நவீனமயப்படுத்தி வழங்கியுள்ளது.

மேலும் இந்த நிறுவனத்தின் புதிய தயாரிப்பான எவ்-17 போர் விமானங்களை இலங்கை விமானப்படைக்கு விற்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இரத்மலானையில் அமைக்கப்பட்டுள்ள காட்சிக் கூடத்துக்குச் சென்றிருந்த இலங்கை ஜனாதிபதி ராஜபக்சவுக்கு இந்த நிறுவனத்தின் சார்பில் எவ்-17 போர் விமானத்தின் திறன்கள் குறித்து சீன அதிகாரிகள் விளக்கமளித்துள்ளனர்.

இலங்கை விமானப்படை சீனாவிடம் வாங்கிய எவ்-7 போர் விமானங்களையும், கே-8விமானங்களையும் பயன்படுத்தி வருகிறது.

அத்துடன் சீனாவிடம் இருந்து மேலும் ஆறு போக்குவரத்து விமானங்களையும் இலங்கை விமானப்படை வாங்கவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# இளவயதுக்கர்ப்பதாரிகள் இலங்கையில் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் வளரிளம் பருவப் பெண்கள் கர்ப்பம் தரிப்பது அதிகரித்துள்ளதாக யுனிசெப் இன் அறிக்கையொன்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டில் உலகச் சிறுவர்களின் நிலை தொடர்பான ஆய்வில் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் 15 வயது தொடக்கம் 19 வயதுக்கு இடைப்பட்ட பெண்களிடையே கர்ப்பம் தரிப்பது அதிகரித்துள்ளது.

1000 குழந்தைப் பிறப்புக்களில் 28 பேர் இள வயதில் குழந்தை பெற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

உலகம் முழுவதும் 1.2 பில்லியன் இளவயதினர் உள்ளனர். இலங்கையில் 3.9 மில்லியன் இளவயதினர் காணப்படுகின்றனர் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை விண்ணப்பங்கள் அடுத்தவாரம்

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை அடுத்த வாரம் தபால் மூலம் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விண்ணப்பப்படிவங்கள் உரிய வகையில் பூர்த்தி செய்யப்பட்டு பாடசாலை அதிபர்கள் ஊடாக மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

2012 ஜனவரி 30ஆம் திகதியாகும்போது 11 வயதிற்குக் குறைந்த மற்றும் 10 வயதிற்கு மேற்பட்ட மாணவர்கள் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கென விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் என பரீட்சைகள் திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது.

இவ்வருடத்திற்கான ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# மூன்று ரஷ்ய பிரஜைகள் கைது

(கொழும்பு)

தொல்பொருட்களை களவாட முற்பட்ட ரஷ்ய பிரஜைகளை பொலிசார் கைது செய்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் தொல்பொருட்களை களவாடுவதற்கு முயற்சித்த மூன்று ரஷ்ய பிரஜைகளே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அனுராதபுரம் அபகிரிய பிரதேசத்தில் தொல்பொருட்களை கண்டு பிடிக்கும் கருவிகளைப் பயன்படுத்தி இவர்கள் களவாட முயற்சித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து ரஷ்ய தூதுவராலயத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# உரிமைகள் மறுக்கப்பட்டுவரும் பெண்களின் விடுதலை அர்த்தமுள்ளதாக அமையவேண்டும்

**இன்று சர்வதேச மகளிர் தினம் அதனையொட்டி இவ் ஆக்கம் இடம்பெறுகிறது**

(கொழும்பு)

உலக ரீதியாக கொண்டாடப்படுகின்ற தினங்களில் பெண்கள் தினம் அல்லது மகளிர் தினம் என்பது மிகவும் முக்கியமான ஒருதினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஆண்டு தோறும் மார்ச் மாதம் எட்டாம் திகதி இத்தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இத்தினம் கொண்டாடப்படுவதன் நோக்கம் பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்து அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளை வலியுறுத்துவதாக அமைகின்றது. பெண்களின் உரிமைகள் தொடர்பாகப் பேசுபவர்கள் பெண்ணிலை வாதிகள்,பெண்ணிய வாதிகள் முதலான பெயர்களால் அழைக்கப்படுகின்றனர். இத்தகைய உரிமைகளைப் பேசுகின்ற கோட்பாடு பெண்ணியம் என்ற பெயராகவும் வழங்கப்பட்டு வருகின்றது. இத்தகைய கோட்பாட்டு ரீதியான வளர்ச்சிக்கு அத்திவாரமாக பெண்கள் உரிமைகள் காலம்தோறும் மறுக்கப்பட்டிருந்தமை காரணமாக அமைகின்றது. எனினும் இத்தகைய உரிமைகளைப் பேசவேண்டுமா? என்ற கேள்வியையும் அதிக சந்தர்ப்பங்களில் காணக்கூடியதாகவுள்ளது.

அடுப்பூதும் பெண்களுக்கு பள்ளிப் படிப்பு எதற்கு என்கின்ற ஒரு நிலை வரலாற்றின் ஒரு காலகட்டப் பகுதிகளில் நிலவியிருந்ததை காணக்கூடியதாக உள்ளது. இத்தகைய ஒரு நிலையை மாற்றுவதற்கான முயற்சியில் முன்னின்றவர்களில் ஒருவராக பாரதியாரைக் குறிப் பிடலாம். நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வை புவியில் யார்க்கும் அஞ்சாத தன்மை போன்றவை பெண்களுக்கு வேண்டும் என்கின்ற வகையில் பாரதி புதுமைப் பெண்ணைக் காண விரைந்தார்.

பாரதியின் இத்தகைய விழைவிற்கு அடிப்படையாக பெண்கள் பாரதியார் காலத்துக்கு முன்னர் அடைந்திருந்த நிலைமை காரணமாக அமைந்திருந்தது. சங்க இலக்கியங்களில் பெண்கள் அடிமைப்பட்டிருந்த நிலைமையை விளக்கும் கருத்துக்கள் காணப்படுக்கின்றன.

கணவனை இழந்த பெண் வீட்டை விட்டு வெளியில் வரமுடியாத அளவுக்கு மிகவும் கொடுமைப்படுத்தப் பட்டிருக்கின்றாள். அவள் எந்த விதமான சுபகாரியங்களிலும் பங்கு பற்ற முடியாத அளவுக்கு அமங்கலியாக சித்தரிக்கப்பட்டிருக்கின்றாள். மொட்டை அடித்து வீட்டின் மூலையில் இருத்தி உப்பில்லாத உணவு வழங்கி உணர்ச்சியற்ற ஒருத்தியாக இத்தகைய பெண்கள் இருந்திருக்கின்றனர். இவ்வாறான



ஒரு நிலையில் தான் உயிர்வாழ விரும்பாமல் தன் உயிரை கணவன் உடன் கட்டையிலேயே நீத்துக்கொண்ட நிலையும் காணப்பட்டது. இது பின்னர் வீரமரபாக உடன்கட்டை ஏறல் என்கின்ற வகையில் போற்றப்பட்டு வந்திருக்கின்றது. இத்தகைய ஒரு நிலையில் பெண்கள் பலவந்தமாகவும் உடன் கட்டை ஏற்றப்பட்டிருக்கலாம் எனவும் ஐயம் கொள்ள வைக்கின்றது.

இத்தகைய ஒரு நிலையை புறநானூற்றுப் பாடல்களில் காணக்கூடியதாக உள்ளது. இந்நிலைமையை சிலப்பதிகாரம் பாண்டிய மன்னன் மனைவி கோப்பெருந்தேவியின் இறப்பின் மூலமாகவும் வலியுறுத்தி வந்துள்ளது. பெண்கள் வாழ்க்கைத் துணையாக வள்ளுவரால் சித்தரிக்கப்பட்டுள்ளனர். கணவனின் வருமானத்துக்குத்தக்க வகையில் வாழ்க்கை நடத்தும் ஒருத்தியாக பெண்ணை வள்ளுவர் சித்தரிக்கின்றார். பிற தெய்வங்களை வணங்காது தன் கணவனைத் தெய்வமாகத் தொழவேண்டிய நிலையை வள்ளுவர் தனது குறள்களிலே சித்தரித்துள்ளார்.

பெண்கள் வருமானம் ஈட்டுகின்றவர்களாக இல்லாமல் ஆண்களின் வருமானத்தில் தங்கி வாழ்கின்ற ஒரு சூழ் நிலையில், பெண்கள் ஆண்கள் இறந்தவுடன் அவர்களோடு இறந்து விட வேண்டும் என்கின்ற ஒரு நிலை இருந்து வந்தது.

கல்வி அறிவின்மை, வருமானத்தை ஈட்டமுடியாமை முதலிய காரணங்களால் பெண்கள் அடிமைப்பட்டு இருந்த நிலையை மாற்ற முனைந்தவராக பாரதியார் காணப்படுகின்றார். கல்வி அறிவு பெறவேண்டும் என்கின்ற கருத்தை வலியறுத்தினார். கைம்மை நோன்பினால் பெண்கள் அடிமைப்பட்டிருந்த நிலையை பெண்கள் பெற்றுக் கொண்ட கல்வி அறிவு வருமானம் ஈட்டும் தன்மை மாற்றிக் கொண்டு செல்கின்ற தன்மையை ஜெயகாந்தன் தனது 'யுகசந்தி' என் கின்ற கதையின் ஊடாக எடுத்து விளக்கியுள்ளார். இத்தகைய ஆரோக்கிய மான நிலைகள் பெண்கள் தொடர்பான எதிர் மனப்பாங்கான போக்குகளை மாற்றத்தொடங்கின.

இன்றைய நிலையில் பெண்கள் அனைத்து வகையிலும் ஆரோக்கியமான வளர்ச்சியைப் பெற்று வருகின்றார்கள் என்றே கூறவேண்டும். பெண்கள் உரிமைகள் பெண்விடுதலை என்ற பெயர்களிலும் மாற்றம் ஏற்பட்டு நிலைச் சமத்துவம் என்ற வகையில் தற்போது இத்தகைய கருத்துக்கள் பேசப்பட்டு வருகின்றன.

பெண்கள் தொடர்பான முன்னேற்றத்தினைக் குறிப்பிடும் வகையில் அண்மைய யாழ்.மாவட்ட நிர்வாகத் துறையில் அதிகளவில் நிர்வாகத்தின் முக்கிய பதவிகளில் பெண்கள் பதவி வகிப்பதை காணமுடிகின்றது. பெண்கள் உரிமைகள் முழுமையாக வழங்கப்பட்டு விட்டன என்று இத்தகைய புள்ளிவிபரங்களை வைத்து மதிப்பிட்டு விடமுடியாது.

பெண்களுக்கு இழைக்கப்பட்டு வருகின்ற கொடுமைகளும் அடக்கு முறைகளும் பெயர் மாற்றப்பட்டு வேறு வகைகளில் இடம்பெற்று வருகின்றமையையும் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இத்தகைய நிலைகள் மாறும் வரை பெண்கள் தொடர்பான அவர்களின் உரிமைகள் தொடர்பாக கதைக்க வேண்டிய தேவை தொடர்ந்த வண்ணமே இருக்கும்.

பெண்கள் தொடர்பான உரிமைகள் அவர்கள் அடக்கப்பட்டிருந்த தன்மைகளை மாற்றவேண்டும் என்கின்ற கருத்து 'கண்ணகி' என்ற பாத்திரத்தின் ஊடாக சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோ அடிகளால் முன்வைக்கப்பட்டது. இந்நிலைமையின் தொடர்ச்சியாக பெண்கள் அடக்குமுறையைப் பெருமளவில் ஆண்களே எழுதி வந்திருக்கும் பணியை காணக்கூடியதாக இருந்தது. இந்நிலையில் மாற்றம் ஏற்பட்டு பெண்களே தமது பிரச்சினைகளை எழுதுகின்ற புதிய போக்கு நிலவிவருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

பெண்கள் உரிமைகள் என்ற விடயத்தில் அவர்களுக்கான உரிமைகள் யாரிடத்தில் இருந்து மறுக்கப்பட்டன? அல்லது கிடைக்கவேண்டியன? என்ற கேள்விகள் எழுவதும் இந்நிலையில் சுட்டிக்காட்ட வேண்டிய ஒன்றாக அமைகின்றது. பெண்கள் ஆண்களால் அடிமைப்படுத்தப்பட்டு இருக்கின்ற நிலையே பெரிதும் பேசப்பட்டு வருகின்றது. பெண்கள் பெண்களாலும் (மாமியார், மருமகள்) பெண்கள் சமூகத்தினராலும் ஒதுக்கப்படுகின்ற, அவர்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டு வருவதையும் இவ்விடத்திலே சுட்டிக்காட்ட வேண்டிய நிலையுள்ளது.

இத்தகையதொரு நிலையில் பெண்கள் விடுதலைபெற்று சுதந்திரமாக வாழ வைப்பதும் அவர்களுக்கான உரிமைகளை வழங்குவதும் இன்றைய நாளில் இத்தினத்தை கொண்டாடுவதன் பயனாக அமைய வேண்டும் என்பதே அனைவரதும் எண்ணமாகும்.

பூஞ்சிட்டு

## வாக்குப் பதிவு நிலையங்களுக்கு வேட்பாளருக்கு அனுமதியில்லை

(கொழும்பு)

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை முன்னிட்டு அஞ்சல் மூல வாக்குகளைப் பதிவு செய்யும் மத்திய நிலையங்களுக்கு இந்த முறை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் செல்ல முடியாது எனத் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

அரசியல் கட்சிகளின் செயலாளர்களின் அனுமதியுடன் ஒரு பிரதிநிதி மட்டுமே, குறித்த வாக்குப் பதிவு செய்யும் மத்திய நிலையங்களுக்குச் செல்லமுடியுமென தேர்தல்கள் செயலகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அதற்கு மேலதிகமாக பவ்ரல் அமைப்பு தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் பணிகளை மேற்கொள்ள முடியும் என அவர் அறிவித்துள்ளார். இதேவேளை, மத்திய நிலையங்களில் குழப்ப நிலை தோன்றினாலோ அல்லது முறைகேடான சம்பவங்கள் ஏதாவது இடம்பெறும் தருணத்திலோ தேர்தல்கள் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் அனுப்பி வைக்கப்படுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை,உள்ளூராட்சிச் சபைத்தேர்தல் தொடர்பான அஞ்சல் மூலமான வாக்களிப்புப் பதிவுகள் எதிர்வரும் 8ஆம் மற்றும் 9 ஆம் திகதி களில் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, தேர்தல்களில் போட்டியிடுபவர்களுக்கான அடையாள அட்டைகள் அடுத்த வாரமளவில் விநியோகிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் சம்பியன் வீதிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்குநேர் மோதிக்கொண்ட விபத்தில் இருவர் காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டன.

காயமடைந்தவர்களில் கொக்குவில் பகுதியைச் சேர்ந்த தில்லைநாதன் டினுசன் (வயது21) யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். மற்றைய நபர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியதாக தெரிவிக்கப்படுகின்றது. (மி)

## பிரசாரக்கூட்டத்துக்கு இடையூறு பொலிஸ்மா அதிபரிடம் புகார்



(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்று மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரிக்கும் வகையில் கடந்த வெள்ளிக்கிழமை தான் கலந்துகொண்ட கூட்டத்திற்கு இறையூறு விளைவித்த போது பொலிஸார் பக்கச்சார்பாக நடந்து கொண்டமை தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகத் தான் பொலிஸ் மா அதிபரிடம் பேசியதற்கிணங்க விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிப்பதாக பொலிஸ் மா அதிபர் உறுதியளித்துள்ளார் என ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டார்.

அமைச்சர் அதாவுல்லா மற்றும் கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை ஆகியோரின் தலைமையிலான குழுவினராலேயே குறித்த சுட்டம் குழப்பப்பட்டதாக ரவூப் ஹக்கீம் குற்றஞ்சாட்டினார்.

இதன்போது, குழப்பம் விளைவித்தவர்களுக்கு எதிராக பொலிஸார் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் அவர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

## அதிகரிக்கும் தேர்தல் வன்முறை


(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத்தேர்தல் தொடர்பாக இதுவரை 98 வன்முறைச் சம்பவங்கள் முறைப்பாடு செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் தொடர்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் காமினி நவரட்ண தெரிவித்தார்.

தேர்தல் வன்முறைகளில் ஈடுபட்டார்களெனத் தெரிவித்து 130பேர் கைது செய்யப்பட்டதாகவும்,இவர்களில் பெருமளவானோர் கடுமையான எச்சரிக்கைக்குப் பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டமை உட்பட 228 தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக கபே அமைப்புத் தெரிவித்தது.

# காங்கிரஸ் - தி.மு.க. விரிசலுக்கு காரணம் என்ன? உண்மை நிலையை விளக்குகிறார் திக்விஜய் சிங்



(சென்னை)

தி.மு.க மத்திய அமைச்சரவையிலிருந்து வெளியேறுவதற்கு தொகுதிகள் ஒதுக்கீடுப் பிரச்சனை காரணமல்ல என அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர்களில் ஒருவரும், மூத்த காங்கிரஸ் தலைவருமான திக்விஜய் சிங் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சி 63 இடங்களைக் கேட்பதாகவும், கேட்கும் தொகுதிகள் தரப்பட வேண்டும் என்றும் கோருவதாகவும் தி.மு.க குற்றம்சாட்டியுள்ளது. ஆனால், பிரச்சினை அதுவல்ல என்று டெல்லி பத்திரிக்கையாளர்களிடம் காங்கிரஸ் கட்சியின் தரப்பில் மறுப்புத் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் தனது குடும்பத்தினரை மத்திய புலனாய்வுக் கழகம் விசாரணை செய்யக் கூடாது என்ற தி.மு.க தலைமையின் கோரிக்கையைப் பிரதமர் அலுவலகம் நிராகரித்து விட்டதும், இது குறித்து காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தியிடம் பேச முடியாத வகையில், ராகுல் காந்தி தரப்பு முட்டுக்கட்டை போட்டதும்தான் தி.மு.க.வின் கோபத்துக்குக் காரணம் என அவர்கள் கூறுகின்றனர்.

நீதிமன்ற நெருக்கடியால் அடுத்த சில நாட்களில் கனிமொழி மட்டுமன்றி கலைஞர் தொலைக் காட்சியின் முதலீட்டாளர் என்ற வகையில் முதல்வரின் மனைவி தயாளுஅம்மாளையும் மத்திய புலனாய்வுக் கழகம் விசாரணை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதால்தான் தி.மு.க இந்த முடிவுக்கு வந்துள்ளது.

தொகுதிப் பங்கீட்டில் பிரச்சினையை உருவாக்கி அந்த ஒரு காரணத்தை வைத்து கூட்டணியிலிருந்து வெளியேறிவிட்டால், பின்னர் தங்களை மத்திய புலனாய்வுக் கழகம் விசாரணை செய்தால், கூட்டணியிலிருந்து விலகியதால் காங்கிரஸ் கட்சி தங்களைப் பழி வாங்குவதாகக் கூறிக் கொண்டு அனுதாபம் தேடிக் கொள்ளலாம் என தி.மு.க. நினைக்கிறது என டெல்லி காங்கிரஸ் வட்டாரத்தில் தெரிவிக்கப்படுகின்றது.

## கட்சி தாவும் படலம்; ஐ.தே.க. வேட்பாளர்கள்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு விண்ணப்பித்தவர்களில் இதுவரை 21 பேர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்துள்ளதாக இளைஞர் விவகார, திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும நேற்றுத் தெரிவித்துள்ளார்.

மஹாவலி நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர், ஐ.தே.க. தனது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசார தொனிப் பொருளை அடிக்கடி மாற்றி வருவதாகவும் கூறினார்.

ஆரம்பத்தில் அவர்களின் பிரசாரம் வெள்ளத்தையும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோரையும் பற்றியதாக இருந்தது. பின்னர் தேங்காய் விலை குறித்து பேசினார்கள். அதன்பின் வெங்காயம் குறித்துப் பேசினார்கள். இப்போது வெங்காய விலை ஸ்திரமடைந்துள்ளது. இனி பிரசாரத்திற்கு வேறு எதுவும் கிடைக்காததால் புடலங்காய் குறித்து பேசுவார்கள் எனவும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும கூறினார்.

சில பொருட்களின் விலை உயர்வாக இருந்தாலும், அவை கிராமப் பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் விவசாயிகளின் கைகளுக்கே செல்கின்றன. நீண்டகால அடிப்படையில் இது நாட்டிற்கு நன்மையளிக்கும் என அவர் கூறினார்.

2005 ஆம் ஆண்டின் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் 76,618 கிராம அபிவிருத்தித் திட்டங்களை மேற் கொண்டுள்ளதாகவும் இதனால் 13 மில்லியன் பேர் நன்மையடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## பேராதனை பல்கலைக்கு அருகில் பாரிய தீ விபத்து

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழகத்தின் விஜேவர்த்தன மண்டபத்திற்கு அருகிலுள்ள காணியில் 10 ஏக்கருக்கும் அதிகமான பகுதி நேற்றுப் பரவிய தீ காரணமாக சேதமடைந்துள்ளது.

இத்தீயினால் இப்பகுதியில் எவருக்கும் காயமோ சொத்துக்களுக்கு சேதமோ ஏற்படவில்லை என கண்டி தீயணைப்புத் துறையினர் தெரிவித்துள்ளனர். இத்தீ கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தீயணைப்புப் படையினர் தெரிவித்தனர்.

## மகளிர் தினத்தைப் பயன்படுத்தி தேர்தல் பிரசாரம் வேண்டாம்

### தேர்தல்கள் ஆணையாளர் கோரிக்கை

சர்வதேச பெண்கள் தினத்தை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரங்களுக்குப் பயன்படுத்த வேண்டாம் என தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க வேட்பாளர்களிடம் கூறியுள்ளார்.

சர்வதேச பெண்கள் தினம் போன்றவை தேசிய ரீதியில் கொண்டாடப்படுவதெனவும், அதைப் பயன்படுத்தி அன்பளிப்புகள் மற்றும் ஏனைய பொருட்களை வழங்கி பிரபல்யம் தேட முற்படுவது சட்டவிரோதமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கட்சிகளின் தலைவர்களுக்கும் சுயேட்சைக் குழுக்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## மீண்டும் இயங்கும் சப்ரகமுவ பல்கலைக்கழகம்

(கொழும்பு)

தற்காலிகமாக மூடப்பட்டுள்ள சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் முதலாம் வருட மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கை நாளை 9ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

வணிகப் பிரிவு முதலாம் வருட மாணவர்களின் பீடங்கள் உட்பட இன்னும் சில பீடங்களுக்கான கல்வி நடவடிக்கைகளே எதிர் வரும் 9ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் மஹிந்த எஸ்.ரூபசிங்க குறிப்பிட்டார்.

பல்கலைக்கழக மாணவர்கள் கல்வி நடவடிக்கையில் பங்கு கொள்ளாததை அடுத்து சப்ரகமுவ பல்கலைக்கழகம் அண்மையில் தற்காலிகமாக மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கடத்தப்பட்ட பெண்...

மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

குடும்பத்தகராறு காரணமாக பிரிந்து கனடாவுக்குச் சென்று கடந்த சனிக்கிழமை கொழும்புக்கு வந்த குறித்த கணவன், தென் பகுதியில் ஹயர்ஸ் வான் ஒன்றை வாடகைக்குப் பிடித்துக் கொண்டு மீசாலைப் பகுதியி லுள்ள தனது மனைவியின் வீட்டுக்கு அன்றைய தினம் பிற்பகல் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அங்கு சென்ற அவர் குறித்த மனைவியையும், மகனையும் தாக்கிவிட்டு அவர்களை வலுக்கட்டாயமாக வானில் ஏற்றுவதை அவதானித்த அயலவர்கள் இது தொடர்பில் பொலிஸாருக்குத் தெரிவித்தனர்.

இதனையடுத்து, பொலிஸார் நேற்று முன்தினம் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்ட போது குறித்த கணவனும், மகனும் சந்தேகத்தின் பேரில் பொலிஸா ரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விசாரணையின்போது மகன் தனது தந்தைதான் அம்மாவைக் கூட்டிச் சென்றதாகத் தெரிவித்ததைத்தொடர்ந்து, பொலிஸாரும், உறவினர்களும் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் அப்பெண் பாழடைந்த வீட்டில் குப்பைகளால் மூடப்பட்ட நிலை யில் சடலமாகக் கிடப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

இதில் 40 வயதுடைய குகதாஸ் சாந்தினி என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ள தாகவும், சாவகச்சேரி நீதிபதி மா. கணேசராசா முன்னிலையில் சடலம் மீட்கப்பட்டு, விசாரணையின் பின் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (11)

## வடக்கில் மனித உரிமைகள்.....

தெரிவித்தார். யாழ். சிவில் நிர்வாக பொது மக்கள் தொடர்பு அலுவலகத் தில் நேற்று முற்பகல் 9.30 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் நான்கு பத்திரிகைகளைச் சேர்ந்த பத்திரிகையாளர் கள் கலந்து கொண்டனர்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்,

யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்ற துரதிர்ஷ்டவசமான சம்பவங்களுடன் தொடர்புடைய இராணுவத்தினர் கண்டுபிடிக்கப் பட்டு அவர்களைக் கைது செய்து தண்டித்துள்ளோம். இந்தளவுக்கு மனித உரிமைகளைப் பேணுவதில் நாம் அக்கறை கொண்டுள்ளோம்.

தற்போது யாழ்.குடாநாட்டில் உள்ள இராணுவத்தினர் விசேட பயிற்சிகளைப் பெற்றவர்களாக இருப்பதால், அவர்கள் பொது மக்களுடன் நல்லுறவைப் பேணுவதில் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகிறார்கள்.

சமாதான சூழ்நிலை ஏற்பட்டுள்ள இச்சந்தர்ப்பத்தில் படையினர் மக்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருவது போல, பொது மக்களும் படையினருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

பத்திரிகையாளர்களைப் பொறுத்த வரையில் எதனையும் சுதந்திரமாக எழுதிச் செயற்படும் வாய்ப்பு அவர்களுக்கு உண்டு. அவர்களது சுதந்திரமான செயற்பாடுகளில் நாம் தலையிட மாட்டோம். ஆனால், அவர்கள் எழுதி வெளியிடும் செய்திகள் உண்மையானவையாக இருக்கவேண்டும். உண்மைக்குப் புறம்பாக மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தக் கூடியவகையில் திரிபுபடுத்தி எழுத வேண்டாம் என்றுதான் கேட்கிறோம்.

தற்போது யாழ்ப்பாணத்தில், உள்ள 20 ஆயிரம் இராணுவத்தினரும் நன்கு பயிற்றப்பட்ட வர்கள். மக்களுடனான தொடர்புகளை எப்படி நல்லுறவுடன் பேண வேண்டுமென்று கண்டிப்பான சில விடயங்களை அறிவுறுத்தியுள்ளோம். அவர்கள் நல்ல கல்வியறிவுடையவர்களாக இருப்பதால் தம்முடைய கடமைகளைச் சிறப்பாக ஆற்றுவார்கள்.

பொதுமக்களுடன் நாம் பேணி வரும் நல்லுறவின் அம்சமாக அவர்களது நிகழ்வுகளில் கலந்துகொள்கிறோம். இந்நிகழ்வுகளில் அவர்களுடனான பரஸ்பரம் நல்லுறவை எம்மால் பேண முடிகிறது.

தமிழ்மக்களை இராணுவம் எப்போதும் எதிரிகளாகக் கணிக்கவில்லை. அதேபோல் மக்களும் எங்களை எதிரிகளாக மதிக்கவில்லை. பாடசாலைகளில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் நாமும் கலந்து கொண்டு அவர்களுக்குப் பரிசில்களை வழங்கிவருகிறோம்.

மீள்குடியேறிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும், அவர்களுக்கு வீடுக ளையும் அமைத்துக் கொடுத்து வந்துள்ளோம் என்று கூறிய அவர், கிடைத்துள்ள சமாதானச் சூழலை நாம் ஒவ்வொருவரும் பாதுகாக்க வேண்டும். அதற்கு பத்திரிகையாளர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் நலன்புரி அதிகாரி றொட்றிக்கோ கேட்டுக்கொண்டார்.

## ஆயுர்வேத வைத்தியர் விபரம் சேகரிப்பு

### மூலிகைத் தோட்டம் அமைக்க நடவடிக்கை

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள பாரம்பரிய வைத்தியர்களின் விபரங்களைச் சேகரிக்கும் நடவடிக்கையில் பாரம்பரிய வைத்தியத்துறைக்கான தேசிய வைத்திய நிறுவனம் ஈடுபட்டுள்ளது. கிளிநொச்சி, முல்லைதீவு மாவட்டங்களில் உள்ள ஆயுர்வேத பாதுகாப்புச் சபைகள் ஊடாக வைத்தியர்களின் விபரங்கள் திரட்டப் பட்டு வருகின்றன.

பாரம்பரிய வைத்தியர்களின் நலனை நோக்கமாகக் கொண்டு இவ்விபரங்கள் சேகரிக்கப்படுவதுடன், மூலிகை உற்பத்தி, மருந்து தயாரிப்பு உட்பட்டவைக்கும் அதிக ஊக்கமளிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக பாரம்பரிய வைத்திய அபிவிருத்திக்கான நிறுவனம் தெரிவித்துள்ளது. இதேவேளை, கிளிநொச்சியில் செயற்பட்டு கடந்த யுத்தத்தால் அழியுண்டு போன மூலிகைத் தோட்டம் மற்றும் மருந்து தயாரிப்பு நிலையங்களை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு தேசிய வைத்திய நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்ட ஆயுர்வேத பாதுகாப்பு சபை இணைச் செயலாளர் பாரம்பரிய மருத்துவர் சு.கணேசராஜன் கேட்டுக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறிதரன் எம்.பி...

தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியிலிருந்து கொழும்பு நோக்கிப்பயணித்துக் கொண்டிருந்த தனது வாகனம் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இது தொடர்பில் நொச்சியாகம பொலிஸில் தாம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் சிறிதரன் எம்.பி. மேலும் கூறினார்.

## யுத்த அனுபவப் பகிர்வு...

பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இராணுவப் பயிற்சி நிலைய ங்களான இலங்கை இராணுவ கல்லூரி, பாதுகாப்புச் சேவை கட்டளைப் பிரிவு போன்ற பல இடங்களுக்கு இக்குழுவினர் விஜயம் செய்யவுள்ளனர். பாகிஸ்தான் இராணுவத் தளபதியின் ஜனவரி மாத விஜ யத்திற்கு பின்னர் இடம் பெற்ற பாகிஸ்தான் பாதுகாப்பு உயர்மட்ட விஜயமாகும்.

## இலங்கையுடன் ஒத்துழைக்க....

கடந்த 50 வருட காலத்தில் நிலவிய உறவுகளை இன்னும் ஐந்து வருடங்களில் இரு மடங் காக அதிகரிக்க முடியும் என நம்புவதாக அவர் மேலும் குறிப் பிட்டார். இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸை பிரேஸிலிற்கான விஜயத்தை மேற்கொள்ளுமாறு இதன்போது அவர் உத்தியோகபூர்வமாக அழைத்தார்.

இராஜதந்திர, உத்தியோக பூர்வ மற்றும் பாதுகாப்புப் படை கடவுச்சீட்டுக்களை வைத்திருப் போருக்கு விசா விலக்களிப்பது தொடர்பாக இரு நாடுகளுக்கு மிடையிலான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக வெளி விவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸை பிரேஸில் வெளிவிவகார அமைச்சர் சந்தித்தார்.

பொறியியல், துறைமுகம், சுரங்கத் தொழில் ஆகிய பல துறைகளில் முன்னணி வகிக்கின்ற பிரேஸிலிடமிருந்து பொருளாதார ரீதியாக விரைந்து முன் னேற விரும்பும் இலங்கை நன்மையடையும் என ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நகர சபை, யாழ்ப்பாணம்.

# சன் சீ கப்பல் பயணிகள் வழக்கு; அகதி அந்தஸ்து கிடைக்க வாய்ப்பு



(கொழும்பு)

எம்.வி.சன்.சி கப்பலில் கனடா சென்றவர்களின் புகலிட அந்தஸ்துகோரும் வழக்கில் அவர்களுக்கு வெற்றி கிட்டியுள்ளது. புலிகளுடன் வெறுமனே இருந்த தொடர்பு அவர்கள் அதன் உறுப்பினர்கள் என்பதை நிரூபிக்கப் போதுமானதல்ல என்று இந்த விசாரணையை நடத்திய சபை தெரிவித்துள்ளது.

இதனால் தமிழர்களை இலங்கைக்கு மீண்டும் திருப்பி அனுப்புவது கனடாவின் சமஷ்டி அரசுக்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. விசாரணைக்குட்படுத்தப்பட்டவர்களுள் சுமார் 30 பேர் புலிகள் இயக்கத்தினர் என்று கருதப்பட்டது.

இந்தக் கப்பல் மூலம் சுமார் 490 இற்கும் அதிகமான இலங்கையர்கள் கனடாவுக்குள் பிரவேசித்திருந்தனர்.

# பஸ் கட்டணங்கள் உயரும் சாத்தியம்

(கொழும்பு)

பஸ் கட்டண தேசிய கொள்கைக்கு அமைய இந்த வருடத்தின் ஜுன் மாத முதலாம் திகதி கட்டாயமாக பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டுமென அகில இலங்கை தனியார் பஸ் சங்கம் தெரிவித்துள்ளது.

எனினும் அதற்கு முன்னர் டீசல் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டால் பஸ் கட்டணம் உடனடியாக அதிகரிக்கப்படுமென அந்தச் சங்கத்தின் தலைவர் ஸ்டேன்லி பெனாண்டோ தெரிவித்தார்.

இதற்கு முன்னர் இந்திய எண்ணெய் நிறுவனத்தால் டீசல் விலையில் அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்ட போதும், இலங்கை எண்ணெய்க் கூட்டுத்தாபனம் டீசல் விலையை அதிகரிக்கவில்லை.

எனினும் டீசல் விலை அதிகரிப்பின் பஸ் கட்டணமும் அதிகரிக்கப்பட வேண்டுமென அகில இலங்கை தனியார் பஸ் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ண குறிப்பிட்டுள்ளார்.

# புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிக்க உத்தரவு

தடுத்து வைக்கப்பட்டுள்ள 118 புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

புலிகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்றார்கள் என்ற குற்றச்சாட்டில் குற்றத் தடுப்புப் பிரிவினரால் இவர்கள் பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என பொலிஸார் நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

குறித்த 118 சந்தேகநபர்களை நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்திய போதே பொலிஸார் இவ்வாறு கூறியுள்ளனர்.

இதனையடுத்து குறித்த சந்தேகநபர்கள் 118 பேரையும் வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பி ஒரு வருட புனர்வாழ்வளிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# அரசு - கூட்டமைப்பு சந்திப்பு மார்ச் 22 இன் பின்பு நடைபெறும்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சுவார்த்தை மார்ச் 22 ஆம் திகதி நடாளுமன்றம் மீண்டும் கூடிய பின்னர் ஆரம்பமாகும் என அரசாங்கத் தரப்பு நடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்கத் தரப்பு பிரமுகர்கள் உள்ளூராட்சித் தேர்தல்களில் பங்குபற்றுவதாலேயே இப்பேச்சுவார்த்தை ஒத்திவைக்கப்பட்டமைக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி இப்பேச்சுவார்த்தை நடைபெறவிருந்த போதிலும், கடைசி நேரத்தில் அது ரத்துச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து த.தே.கூட்டமைப்பு கவலை தெரிவித்திருந்ததுடன், நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தும் எனவும் அக்கட்சி தெரிவித்திருந்தது.

# பந்துக்குள் போதைப்பொருள்; சிறைக்குள் வந்ததன் மர்மம் என்ன?

## பொலிஸ் விசாரணை தொடர்கிறது

(கொழும்பு)

கொழும்பு - வெலிக்கடை சிறைச்சாலையில் மகளிர் பிரிவில் டென்னிஸ் பந்தொன்றுக்குள் மறைத்துவைக்கப்பட்டிருந்த ஹெரோயின் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வெளியிலிருந்து சிறைச்சாலை மதிலுக்கு மேலாக இந்த ஹெரோயின் பந்து வீசப்பட்டிருக்கலாம் என்று அதிகாரிகள் நம்புகின்றனர்.

வெலிக்கடை சிறைச்சாலைக்குள் பல்வேறு வழிகளில் போதைப்பொருட்கள் கடத்திச் செல்லப்படுவதாக ஏற்கனவே பல தகவல்கள் கிடைத்துள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர். பொரளைப் பொலிஸார் இது குறித்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# திருமலையில் முதலாவது முஸ்லிம் இசுறு பாடசாலை

## கல்வி அமைச்சரால் திறப்பு



ஜனாதிபதியின் விசேட ஆலோசனையின்படி மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் 1000 பாடசாலைகளை சகல வசதிகளுடன் கூடிய பாடசாலையாக தரம் உயர்த்துவதற்கான புதிய திட்டம் ஒன்று இசுறு என அறிமுகப்படுத்தப்பட்டது.

இவ் இசுறு திட்டத்தின் கீழ் திருமலையில் முதலாவது இசுறு பாடசாலை நேற்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் சி. சந்திரகாந்தன் கிழக்கு மாகாண ஆளுநர் ஆகியோரது பங்குபற்றுதலுடன் திறந்து வைக்கப்பட்டது.

திருமலை - முள்ளிப்பொத்தானை பிரதேசத்தில் அமைந்துள்ள சிராஜ் முஸ்லிம் மகா வித்தியாலயம் இசுறு பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். 40 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்தப் பாடசாலையே இசுறு வேலைத்திட்டத்தின் கீழ் முதலாவதாக அமைக்கப்பட்டுள்ள முஸ்லிம் பாடசாலை ஆகும்.

# தலைநகரில் தடுமாறும் தமிழ்




(கொழும்பு)

'தமிழ் இனி மெல்லச் சாகும்' என்ற பதத்தை பறை சாற்றுகின்றன தலைநகரின் வீதிகளில் காணப்படும் பெயர்ப் பலகைகள்.

பொரளையிலிருந்து நாரஹென்பிட்டி செல்லும் பிரதான வீதி எல்விடிகல மாவத்தை. அது 'எல்விடிகல' வாக மாறியிருக்கிறது.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு செல்லும் பௌத்தலோக மாவத்தை அது 'பேளத் தாலோக' வாக மாறியிருக்கிறது. கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான காரியாலயம் ஒன்றில் நாரஹென்பிட்டி 'நாரன் பிட்டி' யாக மாறியிருக்கிறது.

இலங்கையின் பெரும்பாலான பகுதிகளில் காணப்படும் மும்மொழி மூலப் பெயர்ப் பலகைகளில் எப்படியாவது ஒரு தமிழ் எழுத்துப் பிழையை கண்டு பிடித்துவிடலாம் என்கிறார் பொது மகன் ஒருவர்.

# மீனவர்கள் விடுதலை

(கொழும்பு)

சட்டவிரோதமாக இந்தியக் கடற்பிராந்தியத்தினுள் நுழைந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருந்த 45 இலங்கை மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

விடுவிக்கப்பட்ட இவர்கள் இந்திய கரையோர காவல்படையினரின் கண்காணிப்புக் கப்பலான 'விஸ்வாஸட்' மூலமாக கொண்டு வரப்பட்டு இந்திய இலங்கை கடல் எல்லையில் வைத்து, இலங்கை கடற்படைக் கப்பல் 'ரணதீர'விடம் கையளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களையும், எட்டு மீன்பிடிப் படகுகளையும் இலங்கை கடற்படையினர் காங்கேசன் துறை துறைமுகத்திற்கு கொண்டு வந்து விடுவித்துள்ளனர்.

இலங்கை மீனவர்களின் விடுவிப்பு தொடர்பில் மீன்பிடித் துறை அமைச்சு முயற்சிகளை மேற்கொண்டிருந்தது.

# கிரிக்கெட் விமர்சகராக இலங்கை வந்துள்ள பாகிஸ்தானிய பார்வையற்ற பெண் பத்திரிகையாளர்



(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் வீரர்களின் அன்பை வென்றுள்ளார் பாகிஸ்தானைச் சேர்ந்த கண்பார்வையற்ற ஒரு ரசிகை.

இவர் தற்போது கிரிக்கெட் போட்டிகளின் நிமித்தம் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். இவர் சிறு வயதிலிருந்தே விழி வெண்படலம் பாதிக்கப்பட்டு பார்வை இழந்தவர்.

ஆனால், சானியா செயிதி என்ற இந்த ரசிகை பாகிஸ்தானின் முல்டான் பிரதேச பஹா" ஹத்தின் சக்கரியா பல்கலைக் கழகத்தில் மக்கள் தொடர்பாடல் பீடத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார்.

அத்தோடு சில உள்ளூர் பத்திரிகைகளில் விளையாட்டு விமர்சனப் பத்தி எழுத்தாளராகவும் உள்ளார். ஒரு சுதந்திர ஊடகவியலாளர் என்ற ரீதியில்தான் இவர் தற்போது இலங்கைக்கும் விஜயம் செய்துள்ளார்.

இவர் இலங்கை கிரிக்கெட் வீரர்களின் ஒரு அபிமானி. அத்தோடு இவரை இலங்கை வீரர்களுக்கும் நன்கு தெரியும். அவர்களுக்கு 'நன்கு பரிச்சயமானவர். 2009 இல் இலங்கை அணி பாகிஸ்தானில் கலந்து கொண்ட ஒரு நாள் போட்டித் தொடர் பற்றி இவர் விவரணங்களை எழுதியுள்ளார்.

இலங்கையில் இருப்பது தனக்கு தாய் நாட்டில் இருப்பது போன்றது எனவும் அந்த அளவு இலங்கை வீரர்கள் தன்னோடு அன்பாகப் பழகுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சானியா தன்னோடு அதே பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் சக விரிவுரையாளர் ஒருவரைத்தான் திருமணம் செய்துள்ளார்.

ஆனால் கணவருக்கும் கிரிக்கெட்டுக்கும் சம்பந்தமே கிடையாது. கிரிக்கெட் விடயத்தில் சானியாவுக்கு உதவியாக இருப்பவர் அவரின் சகோதரர் பிலால். இவரோடுதான் சானியா இலங்கை வந்துள்ளார். வானொலி மூலம் கிரிக்கெட் விவரணத்தை நுணுக்கமாக செவிமடுக்கின்றார்.

மேலதிக விவரங்களைப் பந்துக்குப் பந்து விவரியாக பிலால் விளக்குகின்றார். அவற்றை அடிப்படையாக வைத்துத் தான் சானியா விவரணங்களை எழுதுகின்றார். இலங்கையில் வெளியில் சுற்றித்திரிவதற்கும் பிலால்தான் உதவியாக உள்ளார்.

விசேட நபர்களுக்கான ஒரு சஞ்சிகைக்குத் தான் சானியா கட்டுரைகளை எழுதுகின்றார். தன்னைப்போல் ஊனமுற்றவர்களாலும் உலகில் சாதிக்க முடியும் என்று மற்றவர்களுக்கு உணர்த்துவதே தனது நோக்கம் என்றும், நவீன விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் ஊனமுற்றவர்களுக்குக் கூட விடயங்களை இலகுவாக்கியுள்ளது என்றும் கூறுகின்றார் சானியா.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மார்ச் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.